16

யாழ். - 20/=
வன்னி - 20/=

மேகமூட்டம்/ மழை
காற்றுவீச்சு: தென்மேற்குக்காற்று 34 km/h
ஈரப்பதம்: 48%
காற்றழுத்தம்: 1008 hPa
வெளிச்சத் தெளிவு: மிக நன்று
சூரியோதயம்: 05:23
சூரியஸ்தமனம்: 18:04

# உதயன்

சுடர்: 29 கதிர்: 331 வள்ளுவர் ஆண்டு: 2045 ஐப்பசி 6, வியாழன் 23.10.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily



நிறைவேற்று அதிகாரம் நாட்டுக்குத் தேவையா?

பக்கம் 08

# இலங்கைக்கு ஆயுதம் மோடி அரசு விற்பனை

## கடற்படைப் படகுகளை வழங்கவும் கோத்தவுடனான சந்திப்பில் இணக்கம்


யாழ்ப்பாணம், ஒக். 23

இந்தியாவில் புதிதாக பதவியேற்றுள்ள நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு, இலங்கைக்கு ஆயுதங்களையும், கடற்படைப் படகுகளையும் வ்ழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளது.

கடந்த மாதம் இலங்கைக்கு சீன ஜனாதிபதி பயணம் மேற்கொண்டிருந்தார். அந்தக் காலப் பகுதியில் சீன நீர்மூழ்கிக் கப்பல் இரண்டு தடவைகள் இலங்கை கடற்பரப்புக்குள் வந்து சென்றன என்று தெரிவிக்கப்படுகின்றது. சீனாவுடன் இலங்கை பாதுகாப்பு ரீதியில் நெருக்கமடைகின்றது என்று தெரிவிக்கப்பட்டிருந்த பின்னணியில், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ இந்தியாவுக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

நரேந்திர மோடி தலைமையிலான இந்திய மத்திய அரசு பதவிக்கு வந்த பின்னர் இந்தியாவுக்கு பயணம் மேற்கொண்டிருந்தார் பாதுகாப்பு செயலாளரும், ஜனாதிபதியின் சகோதரருமான கோத்தபாய ராஜபக்ஷ. புதிய பாதுகாப்பு அமைச்சர் அருண் ஜெட்லியை முதல் தடவையாக கடந்த திங்கட்கிழமை சந்தித்துக் கலந்துரையாடியி

14 ஆம் பக்கம் பார்க்க



## எல்லாளன் நடவடிக்கை; வெளிநாடுகளில் நினைவுகூரப்பட்டது

லண்டன், ஒக்.23

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பால் அனுராதபுரம் விமானப் படைத் தளம் மீது மேற்கொள்ளப்பட்ட எல்லாளன் நடவடிக்கையை நடத்தி, உயிர்நீத்தவர்களை நினைவுகூரும் நிகழ்வுகள் நேற்றுப் புலம்பெயர் தேசங்களில் உணர்வுபூர்வமாக நடத்தப்பட்டுள்ளன.

2007ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 22 ஆம் திகதி இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. இந்தத்தாக்குதலில் இலங்கை விமானப்படையின் இருபதுக்கும் மேற்பட்ட வான்கலங்கள் அழிக்கப்பட்டன என்று தெரிவிக்கப்படுகின்றது. அதில் புலிகள் அமைப்பைச் சேர்ந்த 21 பேர் உயிர்நீத்திருந்தனர் என்றும் அந்த

14ஆம் பக்கம் பார்க்க

## பூட்டில்லாத சைக்கிள்களை அள்ளியது பொலிஸ்

யாழ்ப்பாணம், ஒக்.23

பூட்டுகள் இல்லாத நிலையில் வீதிகளில் நிறுத்தப்பட்டிருந்த 24 சைக்கிள்களை நேற்று அள்ளிச் சென்றனர் சுன்னாகம் பொலிஸார். சைக்கிள் உரிமையாளர்கள் அவற்றுக்குரிய பூட்டுகளை வாங்கிச் சென்று காட்டியதை அடுத்துப் பொலிஸார் சைக்கிள்களை மீள ஒப்படைத்தனர்.

சைக்கிள்கள் திருட்டுப் போவது அதிகரித்துள்ள நிலையில், பொதுமக்கள் அதுகுறித்து அக்கறையற்று உள்ளதுடன், சைக்கிள்கள் திருட்டுப் போன பின்னர் பொலிஸாரிடம் முறையிட ஓடுகின்றனர்.

14 ஆம் பக்கம் பார்க்க

## எப்படி இருந்த யாழ்ப்பாணம்.....



முண்டியடித்துக் கொண்டிருக்கும் இவர்களைப் பார்த்து ஏதாவது போராட்டம், ஆர்ப்பாட்டம் நடக்கின்றது என்று நினைத்துவிடாதீர்கள். இவர்கள் இவ்வாறு ஆவேசத்துடன் நிற்பது நேற்று வெளியான இந்தியத் திரைப்படமான, நடிகர் விஜய் நடிப்பில் வெளியான கத்தி திரைப்படத்தைப் பார்ப்பதற்காகத்தான். இந்தக் காட்சி இந்தியாவில் இல்லை; யாழ்ப்பாணம் நகரில் உள்ள திரையரங்கு ஒன்றின் முன்பாகவே. (ற-21)

## பாப்பரசருடைய வருகை ஜனவரி இடம்பெறுமா?

### கொழும்பு பேராயர் மல்கம் ரஞ்சித் ஜனாதிபதியிடம் கேள்வி

யாழ்ப்பாண்ம், ஒக். 23

புனித பாப்பரசரின் இலங்கைப் பயணம் எதிர்வரும் ஜனவரி மாதம் இடம்பெற வேண்டுமா? இல்லையா என்பதைத் தீர்மானிக்க வேண்டும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் கடிதம் எழுதியுள்ளார்.

எதிர்வரும் ஜனவரி மாதம் 13 ஆம் திகதி இரு நாள் பயணமாக புனித பாப்பரசர் பிரான்சிஸ் இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளார். அதேவேளை ஜனவரி மாதம் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படுவது உறுதி என்று இலங்கை அரசு அறிவித்துள்ளது. பாப்பரசர், தேர்தல் காலத்திலோ அல்லது தேர்தல் நடைபெற்று ஒரு மாத காலப்பகுதியிலோ எந்தவொரு நாட்டுக்கும் பயணம் மேற்கொள்வதில்லை. இவ்வாறானதொரு குழப்பமான நிலையிலேயே, மேற்படி கடிதம் கொழும்பு பேராயரால், ஜனாதிபதிக்கு எழுதப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தேர்தல் திட்டம் குறித்து இலங்கை அரசு தெளிவுபடுத்த வேண்டும். தேர்தல் காரணமாக பரிசுத்த பாப்பரசரின் பயணம் பாதிக்கப்படலாம் என்ற அச்சம் தோன்றியுள்ள நிலையிலேயே திருச்சபை இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது. எதிர்வரும் ஜனவரி

14ஆம் பக்கம் பார்க்க

## ஜீ.சி.ஈ. சாதாரண தரம் டிசெ.9 இல்

கொழும்பு, ஒக்.23

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை, இந்த வருடம் டிசெம்பர் மாதம் 9 ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரை நடைபெறும் என்று பரீட்சைகள் ஆணையாளர்

14 ஆம் பக்கம் பார்க்க

## வாழ்த்துக் கூறும் சாக்கில் தகவல் திரட்டிய இராணுவம்

### யாழ்.குடாநாட்டில் பரவலாக நேற்று

யாழ்ப்பாணம், ஒக். 23

தீபாவளி வாழ்த்து அட்டை வழங்குவதைச் சாக்காக வைத்துக் கொண்டு குடும்ப விவரங்களைத் திரட்டும் நடவடிக்கையில் யாழ். மாவட்டத்திலுள்ள இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர். யாழ். குடாநாட்டில் பரவலாக இந்தச் சம்பவம் நேற்று நடந்

14ஆம் பக்கம் பார்க்க

## கால வரையறையற்றது வடக்கு பயண கட்டுப்பாடு

### இராணுவப் பேச்சாளர் திட்டவட்டமாகத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.23

"ஐக்கிய நாடுகள் சபையின் முகவர் அமைப்புக்கள் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கும் வடக்குக்கான பயணக் கட்டுப்பாடு பொருந்தும். இந்தக் கட்டுப்பாடு கால வரையறையற்றது. தொடர்ந்தும் இது நடைமுறையில் இருக்கும்."- இவ்வாறு திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார் இராணுவப் பேச்சாளர் பிரிகேடி

14ஆம் பக்கம் பார்க்க

## உள்ளக விசாரணைக் குழுவினரின் இடைக்கால அறிக்கை பெப். இறுதியில்

கொழும்பு, ஒக்.23

காணாமற்போனோர் குறித்தும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவும் விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழு தனது இடைக்கால விசாரணை அறிக்கையை 2015 பெப்ரவரி இறுதி வாரத்தில் வெளியிடவுள்ளது.

இந்தத் தகவலை குறித்த ஆணைக் குழுவின் தலைவர் மெக்ஸ்வெல் பரண கம நேற்று உறுதிப்படுத்தினார்.

2015 மார்ச்சில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத்தொடரை இலக்கு வைத்துத்தான் பெப்ரவரி இறுதியில் அறிக்கை வெளியிடப்படுகின்றது என்று எழும் குற்றச்சாட்டையும் அவர் நிராகரித்தார்.

மேற்படி விசாரணைக்குழு தனது இடைக்கால அறிக்கையை அடுத்த மாதம் வெளியிடுவதற்கு முன்னதாக உத்தேசித்திருந்தாலும் அதன் விடயப்பரப்பு உள்ளகப் போர்க்குற்ற விசாரணையை முன்னெடுக்கும் வகையில் விரிவுபடுத்தப்பட்டதாலேயே இடைக்கால அறிக்கை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது எனக் கூறப்படுகின்றது.

இடைக்கால விசாரணை அறிக்கையில் பல அம்சங்கள் உள்ளடங்கும் என்றும், விசாரணையின் முன்னேற்றம் குறித்தும், விவரிக்கப்பட்

14ஆம் பக்கம் பார்க்க

# மஹிந்தவின் ஜாதகத்தில் கோளாறு ஏற்பட்டுள்ளது

## இப்படிக் கூறுகின்றார் திஸ்ஸ அத்தநாயக்க

கொழும்பு, ஒக்.23

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஜாதகத்தில் கோளாறு ஏற்பட்டுள்ளது என்று கூறியுள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க.

பாணந்துறை ஹொரோதுடுவ பிரதேசத்தில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சிக் கூட்டமொன்றில் பங்கேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"தற்போதைய அரசு எந்தவொரு நன்மையையும் அளிக்கவில்லை. மஹிந்தவுக்கு முடியும் என எல்லா இடங்களிலும் சுவரொட்டிகளை ஒட்டியுள்ளார். எனினும் நாம் நினைக்கின்றோம் மஹிந்தவால் மூன்றாம் தடவை போட்டியிட முடியாது என்று. போட்டியிட்டாலும் வெற்றியீட்ட முடியாது. தற்போது ஜனாதிபதி மஹிந்தவின் ஜாதகத்தில் கோளாறு ஏற்பட்டுள்ளது.

ஊவா மாகாணசபைத் தேர்தலில் மக்கள் சிறந்த பாடமொன்றை அரசுக்கு கற்பித்தனர். இந்த அரசில் அநேகமானவர்கள் ஊழல் பேர்வழிகள் என்பது மக்களுக்கு தெரியும். அன்று எங்களது படைவீரர்களை, பௌத்த பிக்குகளை கொலை செய்த கருணா அம்மானை ஜனாதிபதி மடியில் வைத்து பாலூட்டுகின்றார். எனினும் ஜனாதிபதி நாட்டை காட்டிக் கொடுக்கப் போவதில்லை என்றும் குறிப்பிடுகின்றார்.

நாட்டின் பெரும்பகுதி சீனாவுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. ராஜபக்ஷ குடும்பம் சொகுசு வாழ்க்கை அனுபவிக்கின்றது. நாட்டு மக்கள் துயரங்களை எதிர்நோக்கி வருகின்றனர். மத்தள விமான நிலையம் ஹம்பாந்தோட்டை துறைமுகம் போன்றவற்றை சீனாவிற்கு வழங்க தற்போதே திட்டம் தீட்டப்பட்டுள்ளது எதிர் வரும் ஜனாதிபதி தேர்தல் தீர்மானம் மிக்கதொன்றா கும்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# சரத் என் சில்வாவை நாடு கடத்த வேண்டும்

## ஞான சார தேரர் கூறுகின்றார்



கொழும்பு, ஒக்.23

முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வாவை நாடு கடத்த வேண்டும் என்று தெரிவித்துள்ளார் பொதுபல பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொடஅத்தே ஞானசார தேரர்.

கிருலப்பனை போதி தர்ம மத்திய நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்று உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

"நாட்டில் எதிர்க்கட்சிகள் பலவீனமடைந்து இல்லாமல் போனதற்கு சரத் என் சில்வா வழங்கிய தீர்ப்பே காரணமாகும். கட்சித் தாவலை நியாயப்படுத்தி சரத் என் சில்வா தீர்ப்பளித்தார். இந்த தீர்ப்பு வழங்கப்பட்டிருக்காவிட்டால் இன்று வலுவான ஓர் எதிர்க்கட்சி இருந்திருக்கும்.

இவ்வாறான ஒரு நபர் 19ஆம் திருத்தச் சட்டத்தை உருவாக்குவது எந்தளவுக்கு நியாயமானது. அவ்வாறு புதிய அரசியல் அமைப்பு ஒன்றை உருவாக்கும் தார்மீக பொறுப்பும் சரத் என் சில்வாவிற்கு கிடையாது. தூய்மையான நாளை என்ற அமைப்புடன் எந்த தொடர்பும் கிடையாது. திடீரென தூக்கத்தில் எழுந்ததனைப் போன்று ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தலைவர் அதுரலிய ரத்ன தேரர் செயற்பட்டு வருகின்றார். எவ்வாறெனினும் ஜாதிக ஹெல உறுமயவும் தமது கட்சியும் ஒரே விதமான கொள்கைகளை பின்பற்றுகின்றன.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் அதிகாரங்கள் வரையறுக்கப்பட வேண்டும். தமிழ் மற்றும் முஸ்லிம் பயங்கரவாதம் தோற்கடிக்கப்படும் வரையில் நிறைவேற்று அதிகாரத்தை நீக்கக் கூடாது"- என்று தெரிவித்துள் ளார். (ற)

## தொலைந்த சிறுவன் பிச்சைக்காரனாக மீட்பு

கொழும்பு, ஒக்.23

அம்பலாங்கொடை பஸ் தரிப்பிடத்தில் கடந்த நவம்பர் மாதம் காணாமல் போன மூன்று வயதான சிறுவன், தம்புள்ளையிலுள்ள பிச்சைக்காரரிடமிருந்து நேற்று புதன்கிழமை பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளான்.

குறித்த சிறுவன், அக்குரஸையை வசிப்பிடமாக கொண்ட தனது ஆச்சியுடன் வசித்து வந்துள்ளார். சம்பவ தினத்தன்று ஆச்சி தனது பேரனுடன் அம்பலாங் கொடையிலுள்ள பஸ்தரிப்பிடத்துக்கு சென்றபோதே குறித்த யாசகர், ஆச்சியை ஏமாற்றி சிறுவனை கடத்திச்சென்றுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பேரனை இழந்த ஆச்சி, பேரனுடன் தான் இணைந்து எடுத்துக்கொண்ட படத்தை நாடளாவிய ரீதியிலுள்ள பொலிஸ் நிலையங்களுக்கு விநியோகித்துள்ளார். சிறுவனின் தாய், வேலைவாய்ப்பு தேடி வெளிநாட்டுக்கு சென்றுள்ளார். சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட பிச்சைக்காரர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ற)

## விபத்துகள்

பருத்தித்துறை

### ஹன்ரருடன் மோதி இளைஞர் சாவு

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் பிரதான வீதியில் பருத்தித்துறை இ.போ.ச. டிப்போவுக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஹன்ரர் வாகனத்துடன் மோட்டார் சைக் கிள் மோதியதில் அதில் பய ணித்த இளைஞர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு சுமார் 9.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் புலோலி புற்றளையைச் சேர்ந்த கூட்டுறவுச் சங்க ஊழியரான தவராசா கண்ணதாசன் (21 வயது) என்பவரே உயிரிழந்தவராவார். பருத்தித்துறையில் இருந்து குறித்த இளைஞர் மோட்டார் சைக்கிளில் திரும்பிக் கொண்டிருக்கையில் இ.போ.ச. டிப்போவுடன் உள்ள வளைவில் வேகக் கட்டுப்பாட்டை இழந்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஹன்ரர் வாகனத்துடன் மோதியதில் விபத்து ஏற்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாகப் பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ற-173,109)



துணுக்காய்

### யானை தாக்கி இருவர் காயம்

துணுக்காய் தேறாங்கண்டல் பகுதியில் யானை தாக்கி இருவர் படுகாயமடைந்தனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை 6.45 மணிக்கு நடைபெற்றுள்ளது. அதில் ஐயன் குளத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் விநாயகமூர்த்தி (வயது - 55), இராசகுமார் உதயகலா (வயது - 37) ஆகிய இருவருமே படுகாயம டைந்த நிலையில் கிளிநொச்சி பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ற-18,415)



கிளிநொச்சி

### வாகன விபத்தில் மூவர் படுகாயம்

கிளிநொச்சியில் நேற்றுக் காலை 9.30 மணியவில் இடம்பெற்ற வாகன விபத்தில் மூவர் படுகாயமடைந்துள்ளனர். குறித்த விபத்து ஏ-9 விதியில் அமைந்துள்ள கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றிற்கு அருகில் இடம்பெற்றுள்ளது. இரண்டு இராணுவ வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதியதால் விபத்து ஏற்பட்டுள்ளது. பரந்தனிலிருந்து வவுனியா நோக்கி சென்று கொண்டிருந்த ஜீப் வாகனமும், பிரதான வீதியில் பயணிக்க முற்பட்ட மற்றுமொரு வாகனமுமே விபத்துக்குள்ளாகின. இதில் பயணம் செய்த இராணுவ வீரர்கள் மூவர் காயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். விபத்து தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ற-55)

# எந்தவொரு தேர்தலையும் வெற்றிகொள்ளும் ஐ.தே.க.

## ஜோசப் மைக்கல் பெரேரா தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.23

எந்தவொரு தேர்தலையும் வெற்றிகொள்ளும் ஆற்றல் ஐக்கிய தேசியக் கட்சிக்கு உள்ளது என்று தெரிவித்துள்ளார் அந்தக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரான ஜோசப் மைக்கல் பெரேரா.

சிங்கள மொழி ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"மக்கள் ஐ.தே. கட்சியை சுற்றி அணி திரண்டுள்ளனர். மக்கள் சக்தியின் ஊடான வெற்றியை தடுக்க எவராலும் முடியாது. எதிர்காலத்தில் ஜனாதிபதி தேர்தல்? அல்லது நாடாளுமன்ற தேர்தலா? நடத்தப்பட உள்ளது என்பது பற்றி எங்களுக்கு கவலையில்லை. நாம் எப்படிச் சொல்வது அடுத்த ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படும் என சில வேளைகளில் அது நாடாளுமன்றத் தேர்தலாகக் கூட இருக்கலாம்.

அரசு உண்மையில் மக்களுக்கு நிவாரணங்களை வழங்கவில்லை. மின்சாரக் கட்டணம், எரிபொருள் மற்றும் எரிவாயு விலை குறைப்பின் ஊடாக மக்களிடம் அறவீடுசெய்யப்பட்ட வரியின் அளவு குறைக்கப்பட்டுள்ளது. உண்மையில் இதனை விலை குறைப்பாக கருத முடியாது. போர் முடிந்து விட்டது என அரசால் பரப்புரை செய்ய முடியாது. தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்கள் தற்போது அரசிலேயே உள்ளனர்.

சட்டவிரோதமானதாக இருந்தால் ஜனாதிபதி தேர்தல் நடைபெறாது. எந்தவொரு தேர்தலையும் வெற்றிகொள்ள நாம் தயார். எந்தவொரு தேர்தலிலும் நாம் வெற்றியீட்டுவோம். சட்டவிரோத தேர்தல் எனக் கூறி நாம் போட்டியிடாவிட்டால் மஹிந்த ராஜபக்ஷ தேர்தலில் வெற்றியீட்டி வி டுவார்"- என்று தெரிவித்துள் ளார். (ற)

## மாணவருக்கான இலவச கருத்தமர்வு

யாழ்ப்பாணம், ஒக்.23

ஜீ.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள வவுனியா தெற்கு வலயத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கான இலவச கருத்தமர்வு எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை இரண்டு பாடசாலைகளில் இடம்பெறவுள்ளது. வவுனியா தமிழ் கலவன் பாடசாலையிலும், இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயத்திலும் காலை 8.30 தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை ஒரே நேரத்தில் கருத்தமர்வு இடம்பெறவுள்ளது என்று தெரிவித்த சட்டத்தரணியும் கணிதபாட ஆசிரியருமான வி.தேவசேனாதிபதி, மாணவர்களை அதில் பங்குகொள்ளுமாறு கோரியுள்ளார். (ற-4)



# முதியோர் இல்லத்தில் தீபாவளி நிகழ்வுகள்

வலி.வடக்கு, ஒக்.23

தீபாவளித் திருநாளை முன்னிட்டு நேற்று கைதடியில் உள்ள முதியோர் இல்லத்தில் பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்றன. இனிய இதயங்கள் மற்றும் லயன்ஸ் கழகம் ஆகியவை இணைந்து இந்த நிகழ்வுகளை ஏற்பாடு செய்திருந்தன. முற்பகல் முதியோர் இல்லத்தில் இனிய இதயங்கள் அமைப்பின் தலைவர் எஸ்.விக்கினராசா தலைமையில நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக லயன்ஸ் கழகங்களின் 306 1 பியின் ஆளுநர் லயன் இக்னேசியஸ் கமிலஸ் மற்றும் அவரது பாரியார் லயன் சீமாட்டி றோசினி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். மங்கள விளக்கேற்றும் நிகழ்வைத் தொடர்ந்து, வாழ்வக மாணவர்களின் கலை நிகழ்வுகள் மற்றும் மானிப்பாய் லயன்ஸ் கழகத்தின் ஓரங்க நாடகம் உட்பட மற்றும் பல பொழுது போக்கு நிகழ்வுகளும் இடம் பெற்றன. கைதடி முதியோர் இல்லத்தில் தங்கியுள்ள 125 பேருக்கும் பல்வேறு பரிசுப் பொருள்கள் வழங்கப்பட்டதுடன் மருந்துவகைகள் பால்மா வகைகள் உணவுப் பொருள்கள் என்பனவும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில யாழ்ப்பாணம் மானிப்பாய் வட்டம், மானிப்பாய் நகரம், தீவகம், நல்லூர், சங்கானை, சாவகச்சேரி, கோப்பாய், தெல்லிப்பழை, மல்லாகம், உரும்பிராய் மற்றும் தென்னிலங்கையில் இருந்து வருகை தந்த லயன்ஸ் கழகங்களின் பிரதி நிதிகளும் கலந்து கொண்டனர். (ற-86)

பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 20/-

கிளாசிக்

சுடர் : 29 வள்ளுவர் ஆண்டு: 2045 ஐப்பசி 6 வியாழன் (23.10.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 331

# புலிகள் மீதான தடை நீக்க விடயத்தில் இயலாமையை ஒப்புக்கொள்கிறதா அரசு?

## அடுத்த நகர்வுக்குத் தயாராகும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கு தகவல் வழங்கத் தொடங்கிவிட்டதாம் வெளியுறவு அமைச்சு

கொழும்பு, ஒக்ரோபர் 23

**விடுதலைப் புலிகள் மீதான தடையை ஐரோப்பிய நீதிமன்றம் நீக்கியுள்ள நிலையில் அடுத்தகட்ட நடவடிக்கையை எடுக்கவுள்ள சம்பந்தப்பட்ட ஐரோப்பிய ஒன்றிய தரப்புகளுக்கு தனது நிலைப்பாட்டை நியாயப்படுத்தத் தேவையான தகவல்களை தான் வழங்கத் தொடங்கியுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.**

விடுதலைப்புலிகள் மீதான தடை நீக்கப்படுவதைத் தடுப்பதற்கு தன்னால் முடிந்த அனைத்தையும் செய்ததாகவும் அதனையும் மீறி இந்தத் தீர்ப்பு அமைந்துள்ளதாகவும் அரசு குறிப்பிட்டுள்ளது.

இதுதொடர்பாக வெளிவிவகார அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளதாவது -

குறிப்பிட்ட நீதிமன்ற வழக்கு தொடுக்கப்பட்ட காலத்திலிருந்து, ஐரோப்பிய ஒன்றிய சட்டத்தரணிகளிடமும் ஐரோப்பாவின் துறைசார்ந்த விசேட சட்டத்தரணிகளிடமும் சட்ட ஆலோசனையும், கருத்துகளும் கேட்கப்பட்டன.

இதனடிப்படையில் இலங்கை அரசு மிகவும் பயனுள்ள வகையில் நடவடிக்கைகளை மேற்கொண்டது. தடையை நியாயப்படுத்துவதற்கு அவசியமான குறிப்பிடத்தக்க ஆதாரங்களை அது தொடர்ச்சியாக குறிப்பிடத்தக்க அளவுக்கு வழங்கியது.

இலங்கை, ஐரோப்பிய ஒன்றியம் சாராத நாடாகக் காணப்பட்டதால், ஐரோப்பிய ஒன்றியத்தின் பொது நீதிமன்றத்தின் முன்னால் தோன்றுவதற்காக விசேட நிபந்தனைகளை ஏற்க வேண்டியிருந்தது. இவை தேச நலத்துக்கு எதிரானவை.

(14ஆம் பக்கம் பார்க்க)

## மலசலகூடம் கழுவியதால் மாணவிகளுக்கு ஒவ்வாமை

### தீவக வலயப் பாடசாலை ஒன்றில்

யாழ்ப்பாணம், ஒக். 23

பாடசாலையில் உள்ள மலசலகூடங்களை மாணவிகள் கழுவியமையால் அதற்குப் பயன்படுத்திய அமிலம் காரணமாக அவர்களுக்குத் தீவிர ஒவ்வாமை ஏற்பட்டு யாழ். போதனா வைத்தியசாலை விடுதியில் சிகிச்சை பெற்றுப் பின்னர் வீடு திரும்பியுள்ளனர்.

தீவக வலயத்திலுள்ள ஒரு பாடசாலையிலேயே கடந்த வெள்ளிக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அங்கு பொதுவாக மாணவர்கள் மூலமாகவே தவணை முறைப்படி மலசலகூடங்கள் கழுவப்படுகின்றன. கடந்த வெள்ளிக்கிழமை சுமார் 12 வயதுடைய குறித்த நான்கு மாணவிகளும் மலசலகூடங்களைக் கழுவியுள்ளனர்.

கழுவுவதற்குரிய அமிலமும் மாணவிகளிடம் கொடுக்கப்பட்டுள்ளது. அதனைப் பயன்படுத்தி அவர்கள் மலசலகூடம் கழுவிய பின்னர் வீடு சென்றுள்ளனர். ஆனால் அந்த அமிலம் அவர்களுக்கு ஒத்துக் கொள்ளாமல் உடலின் பல பகுதிகளிலும் சொறிவு மற்றும் உடல் வீக்கம் ஏற்பட்டது. அதனைத் தாங்க முடியாது மாணவிகள் அவதிப்படவே அவர்களைப் பெற்றோர் வேலணை வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர். அங்கிருந்து அவர்கள் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப் பட்டனர்.

அவர்களில் ஒருவர் சிறுவர் விடுதியிலும் மற்றைய மூவரும் ஏனைய விடுதியிலும் சேர்க்கப்பட்டுச் சிகிச்சை அளிக்கப்பட்டது. பாடசாலைகளில் மலசலகூடங்களைக்

(14ஆம் பக்கம் பார்க்க)

## இளம் தாயை காணவில்லை

நண்பி ஒருவரின் வீட்டுக்குச் சென்று திரும்பிய இரண்டு பிள்ளைகளின் தாயான இளம் பெண் ஒருவர் கடந்த திங்கட்கிழமை முதல் காணாமல் போய் விட்டதாகப் பருத்தித்துறை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாகர்கோவில் கிழக்கைச் சேர்ந்த சுதந்தி கலியுகமூர்த்தி (வயது-36) என்ற இளம் பெண்ணே காணாமல் போயுள்ளதாக அவரது கணவரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை பருத்தித்துறை கிராமக்கோட்டடியில் உள்ள நண்பி ஒருவர் வீட்டுக்கு வந்து பிற்பகல் 1.30 மணிக்குக் குறித்த பெண் திரும்பிச் சென்றதாகவும் ஆனால் அவர் வீடு வந்து சேராது, காணாமற் போயுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. காணாமற்போன இளம் பெண் 27 பவுண் பெறுமதியான தாலிக்கொடியை அணிந்திருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பாகப் பருத்தித்துறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (த-173)

## அலவி மௌலானா கடமை செய்கிறார் வடக்கு ஆளுநர் அரசியல் நடத்துகிறார்

### மனோவிடம் தெரிவித்தார் விக்கி

யாழ்ப்பாணம், ஒக். 23

மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானா சம்பிரதாய பூர்வக் கடமையைச் செய்கின்றார். வடக்கு ஆளுநர் அரசியல் செய்கின்றார். இந்த உண்மையைச் சிங்கள மக்களிடம் எடுத்துச் செல்லுமாறு வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் கோரியதாக, ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

'வடக்கு மாகாண நிர்வாகத்துக்குக் கொழும்பு அரசினால் ஏற்படுத்தப்பட்டு வரும் தடைகளைக் கருத்தில் கொண்டே ஜனாதிபதித் தேர்தலின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முடிவுகளை எடுக்கும்' என்று முதலமைச்சர் தெரிவித்தாக மனோ கணேசன் குறிப்பிட்டார்.

ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசனுக்கும், வடமாகாண முதல்வர் விக்னேஸ்வரனுக்கும் இடையில் சந்திப்பு நேற்றுக் கொழும்பில் இடம்பெற்றது. இதன்போதே மேற்படி விடயங்கள் கலந்துரையாடப்பட்டுள்ளன.





இது தொடர்பில் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் விடுத்துள்ள அறிக்கையில்,

முதல்வராகத் தெரிவு செய்யப்பட்ட வேளையில், வாக்களித்த மக்களினதும், தனது கட்சியின் சிலரதும் அதிருப்திகளை எதிர்கொண்டு கொழும்புக்கு வந்து, அலரி மாளிகையில் பதவிப் பிரமாணம் செய்து தனது நல்லிணக்கத்தை அரசுக்குக் காட்டியதாக விக்னேஸ்வரன் கூறினார்.

அன்று நான் ஜனாதிபதியின் முன்னால் பதவிப் பிரமாணம் செய்து கொள்ளாமல் இருந்திருந்தால், இன்று அதை ஒரு காரணமாக அரசு கூறிக் கொண்டிருக்கும். ஆனால், இந்த அரசு எம் நல்லெண்ணத்துக்கு பரஸ்பர நல்லெண்ணம் காட்டாதது மாத்திரமல்ல, எமக்கு எதிராகப் பகைமையை

(14ஆம் பக்கம் பார்க்க)

## கல்வி வலயத்தின் அனுமதி பெறாமல் மூடப்பட்ட கிளிநொச்சி முன்பள்ளிகள்

### சிவில் பாதுகாப்புத் திணைக்கள நிகழ்வுக்காக

கிளிநொச்சி, ஒக். 23

கிளிநொச்சி கல்வி வலயத்தின் கீழ் உள்ள முன்பள்ளிகளை கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகத்தின் அனுமதியின்றி மூடிய சிவில் பாதுகாப்புத் திணைக்களம் கிளிநொச்சி மாவட்ட முன்பள்ளி ஆசிரியர்களைப் பயன்படுத்திச் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் ஆண்டுவிழா கொண்டாடியதுடன் தன்னிச்சையாக முன்பள்ளி ஆசிரியர் தின விழாவையும் நடத்தியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள 214 முன்பள்ளிகள் வடமாகாணக் கல்வியமைச்சின் கீழேயே இயங்குகின்றன. இவற்றில் பணியாற்றும் 530 முன்பள்ளி ஆசிரியைகளும் வடமாகாண கல்வி அமைச்சினால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றார்கள். இவர்களில் 384 முன்பள்ளி ஆசிரியர்களுக்குச் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தினால் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்ற போதிலும் அவர்களும் வடமாகாண கல்வி அமைச்சினாலேயே நிர்வகிக்கப்படுகின்றார்கள். கிளிநொச்சி மாவட்ட முன்பள்ளிகள் கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகத்தின் கீழேயே உள்ளன. இவர்களுக்கான முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளரும் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் கிளிநொச்சி

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஆலயங்களில் பூசைகளுடன் நேற்று அமைதியான தீபாவளி

யாழ்ப்பாணம், ஒக். 23

யாழ்.குடாநாட்டில் மக்கள் நேற்றுத் தீபாவளித் திருநாளை ஆலயங்களில் பூசை வழிபாடுகளுடன் மிகவும் அமைதியான முறையில் கொண்டாடினார்கள்.

மக்கள் புத்தாடை அணிந்து காலை முதல் ஆலயங்களுக்குச் சென்று பூசை வழிபாடுகளில் பங்குபற்றினார்கள்.

குடாநாட்டின் அநேகமான ஆலயங்களில் நேற்றுக் காலையில் விசேட பூசை அபிஷேக வழிபாடுகள் இடம்பெற்றன.

சில ஆலயங்களில் விசேட பூசை கூட்டு வழிபாடுகளுடன் சுவாமி வீதி வலம் வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.

நல்லூர் கந்தசுவாமி கோயிலில் நேற்றுக் காலை இடம்பெற்ற விசேட பூசை வழிபாடுகளில் பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்துகொண்டனர்.

பொருள்களின் விலை அதிகரிப்பு, வேலையில்லாத் திண்டாட்டம், பொருளாதார நெருக்கடி போன்றவற்றின் காரணத்தால் தீபாவளித் திருநாள் கொண்டாட்டங்களை மக்கள் கடந்த வருடத்தைப் போன்று இம்

(14ஆம் பக்கம் பார்க்க)

## ரயில் பயணத்துக்கு முற்பதிவு சாவகச்சேரியிலும் வேண்டும்

### நகர சபைக் கூட்டத்தில் தீர்மானம்

தென்மராட்சி,ஒக். 23

கொழும்புக்கான ரயில் பயணத்துக்குரிய முற்பதிவுகளைச் சாவகச்சேரி ரயில் நிலையத்திலும் மேற்கொள்ள ரயில்வேத் திணைக்களப் பொது முகாமையாளரைக் கோர வேண்டுமென நகர சபை உறுப்பினர் த.சுதர்சன் சபைக் கூட்டத்தில் தனிநபர் பிரேரணையைச் சமர்ப்பித்தார்.

கடந்த திங்கட்கிழமை அவர் தனிநபர் பிரேரணையைச் சமர்ப்பித்து உரையாற்றுகையில்,

யாழ்ப்பாணம் - கொழும்புக்கான ரயில் சேவை ஆரம்

(14ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மரண அறிவித்தல்



### திருமதி தனலட்சுமி செல்வச்சந்திரன்

வட்டு.கிழக்கு, சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாக வும் கொண்ட திருமதி தனலட்சுமி செல்வச்சந்திரன் நேற்று (22.10.2014) புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துறட்டிப்பனை முத்துமாரி அம்ம சன் கோயில் தர்மகர்த்தா பொன்னுத்துரை - சிவயோகம் தம்பதியரின் அன்பு மக ளும், சாவகச்சேரியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான Dr.இராமநாதன் கந்தையா - சிவபாக்கியவதி தம்பதியரின் பாசமிகு மருமகளும், செல்வச்சந் திரனின் அன்பு மனைவியும், நவரத்தினராசா, இரத்தினராசா, விஜயலட்சுமி, சத்தியலட்சுமி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், பத்மாதேவி, சிவநேசம், காலஞ்சென்ற கணேசலிங்கம், ரவீந்திரன் (பிரதேச சபை, சுழிபுரம்), Dr.விக்கிரமசந்திரன் - லக்சுமி (ஆஸ்தி ரேலியா), ஹரிச்சந்திரன் - யோகா (ஆஸ்திரேலியா), காலஞ்சென்ற குலசேகரம் - தேவகாஞ்சனா (ஆஸ்தி ரேலியா), விமலா - குலசிங்கம் (ஆஸ்திரேலியா), நகுலா - காலஞ்சென்ற குலசேகரம் (ஆஸ்திரேலியா), சந்திரன் - கௌரி (ஆஸ்திரேலியா), நிர்மலா - சோமசுந்தரம் (ஆஸ்திரேலியா), பாலேந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், பகீரதன், பானுஜன், ரஜனிகா ஆகியோரின் பெரியம்மாவும், வசந்தன், உதயன், விம லன், ஜெனந்தன், கிருசாந்தி ஆகியோ ரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.10.2014) வியாழக்கிழமை காலை 9 மணியளவில் இடம்பெற்று, தகனக்கிரியைகளுக்காக வழுக்கையாறு இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வட்டு.கிழக்கு,
சித்தன்கேணி.

(53429)
(12.6)

தகவல்: குடும்பத்தினர்.
077 254 5296, 078 468 5937

# தனியாக வசித்த மூதாட்டி சடலமாக மீட்கப்பட்டார்

யாழ்ப்பாணம், ஒக்.23

தனியாக வீட்டில் வசித்து வந்த மூதாட்டி ஒருவர், நேற்று வீட்டில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இளவாலை, பத்னாவத்தையைச் சேர்ந்த இராஜநாயகம் இராஜேஸ்வரி (வயது-75) என்ற மூதாட்டியே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அந்த வீட்டின் அயல் வீட்டு உரிமையாளர் பொலிஸாருக்கு இதுகுறித்துத் தகவல் தெரிவித்துள்ளார். அதையடுத்து அங்கு சென்று விசாரணைகளை மேற்கொண்ட இளவாலைப் பொலிஸார், மூதாட்டியின் உடலில் வெட்டுக் காயம் காணப்படுவதால், அவர் கொலை செய்யப்பட்டிருக்கக் கூடும் என்றும், நேற்றுமுன்தினம் அவர் உயிரிழந்திருக்கக் கூடும் என்றும் தெரிவித்துள்ளனர்.

மல்லாகம் நீதிமன்ற நீதிபதி சடலத்தினை பார்வையிட்ட பின்னர், பிரேத பாசோதனைக்காக யாழ். போதனா வைத்திய சாலையில் ஒப்ப டைக்கப்படவுள்ளது என்றும், இந்தச் சம் பவம் தொடர்பில் விசா ரணைகள் ஆரம்பிக் கப்படவுள்ளன என் றும் பொலிஸார் தெரி வித்தனர். (ற-106)

## கண்ணீர் அஞ்சலி

### விக்கினேஸ்வரன் செஞ்சுடர்



அன்புத்தம்பி ஆசைக்கு என்று ஓர் தம்பியடா - நீ
பாசத்தை அள்ளி வீசிவிட்டு
பாதியிலே எனைவிட்டு சென்றாயடா
உன்பிரிவை நினைத்து துடிக்கும்.

உன் அக்கா சுபாஜினி

(C/17135)(7.6)




## மதுரா அழகுகலை பயிற்சி நிலையம்



(கோப்பாய் நாவலர் பாடசாலை அருகில்)

ஏயார் பிரஷனல் மேக்கப், கிறியேற்றிவ் மேக்கப், ஸ்ரிக் & கேக், டே, ஓயிலி, ஈவினிங், ஸ்பிறே ஆகிய மேக்கப் பிரைடல் டிரெஸ்ஸிங், 4 முறை பார்ட்டி மேக்கப், கென்வகேஷன் மேக்கப்,பேசியல் 20 வகை ஸ்கின்அனலைஸ் (மெசினறிட்றீட்மெண்ட் 5 முறை) ஐ ட்றீட் மெண்ட், றீபொண்டிங், அயனிங், பேளிங், டே, பேமனற், பேமிங் 10 முறை, பேமிங், டே, ஹெயர் கட்டிங் 5 பின்றப், ஸ்பாட் றீட்மெண்ட், நெயில் ஆர்ட், பேமனற், டே, ஹெயார் செற்றிங் பெடிகியூர், மெனிகியூர், நாச்சுரல் மேக்கப், ஸ்கிரபிங், கிளினப், சாறி டிரெஸ்ஸிங் 30 முறை, ஹெயார் ஸ்ரைல், ஹெயார் கலரிங், மசாஜ் வகை (4), வக்சிங், திரெட்டிங், ஹொட் ஒயில் மசாஜ்-டான்ஸ் மேக்கப்.

புரபஷனல் கோர்ஸ் 20000 டிப்ளோமா கோர்ஸ் 8000 (பயிற்சி நிறைவில் தரமான சான்றிதழ் வழங்கப்படும்)
பயிற்சி பற்றிய விபரம் நேரில்

மகளிர் மட்டும்

பயிற்சியில் இணைய விரும்புவோர் 25.10.2014 அன்று பயிற்சி நிலையத்தில் பதிவுகளை மேற்கொள்ளவும்
சாரி வேர்க், தையல், ஹான்ட் வேர்க், கேக் ஐசிங் ஆகிய பயிற்சிகளும் நடைபெறுகின்றன. ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

077 9362642 (53431)(10.6) பழைய வீதி, கோப்பாய்.


## மரண அறிவித்தல்



### நாகேந்திரம் சிவானந்தன்

யாழ்.நீராவியடியைப் பிறப்பிட மாகவும், ஏழாலை மேற்கு, சுன்னா கத்தை வசிப்பிடமாகவும், லண்டனில் வசித்துவந்தவருமான நாகேந்திரம் சிவானந்தன் 19.10.2014 ஞாயிற்றுக் கிழமை லண்டனில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகேந்திரம் - பொன்னம்மா தம்பதியரின் அருமை மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - பூரணம் தம்பதியரின் அன்பு மருமகனும், பவளராணியின் (லண்டன்) அன்புக் கணவரும், நிஷாந்தினி, பிரதீபன் ஆகியோரின் தந்தையும், பார்த்தீபன், வினோதினி ஆகியோரின் மாமனும், பிரித்திகாவின் பேரனும், சந்திரபாலன் (சுவிஸ்), காலஞ்சென்ற பாலேந்திரன் மற்றும் இந்திராணி (ஜேர்மனி) ஆகியோரின் சகோதரரும், மேகலா (சுவிஸ்), ஜோதீஸ்வரி, நவரத்தினம் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும், உமாதேவி, காலஞ்சென்ற இராசகுமாரியம்மா மற்றும் மகாதேவன், இலங்கைநாதன் (சுவிஸ்), பத்மநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற வைத்திலிங்கம் மற்றும் சிவலிங்கம் ஆகியோரின் சகலனும், இரஞ்சினிதேவி, மதிவதனி, சியாமளா ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 26.10.2014 ஞாயிற்றுக்கிழமை பி.ப.1.30 மணிக்கு லண்டன் மனோபாக் மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சூராவத்தை,
சுன்னாகம்.

(53428)
(12.3.6)

தகவல்: க.மகாதேவன்.
077 611 8227, 021 205 9429

## மரண அறிவித்தல்

### செல்லத்துரை டிஸ்கந்தராசா (ஓய்வு பெற்ற அதிபர்)



புதுக்குடியிருப்பு 7ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் வதி விடமாகவும் கொண்ட செல்லத்துரை டிஸ்கந்தராசா (ஓய்வு பெற்ற அதிபர்) நேற்றுமுன்தினம் (21.10.2014) செவ்வாய்க் கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை- தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் இரஞ்சினிதேவியின் பாசமிகு கண வரும் குமாரு-கந்தையா காலஞ்சென்ற பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் யமுனா, நிறஞ்சனா, திருக்குமரன், காலஞ் சென்ற தனஞ்சயன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ் சென்ற டினுசாந், கோவர்த்தனன், சவிந் ஆகியோரின் பாசமிகு பேர னும் சந்திரகுமார் (அதிபர்,மு/விக்கினேஸ்வரா வித்தியாலயம்) நிமல்ராஜ்(தொழில்நுட்ப உத்தியோகத்தர்) ஆகியோரின் மாமனா ரும் தர்மராசா (ஓய்வு பெற்ற கிராம உத்தியோகத்தர்) பரமராசா (லண்டன்) இராஜேஸ்வரி, இராசநாயகி, வில்வராசா(லண்டன்), புஸ்பராசா (லண்டன்) இராசகுமாரி (ஆசிரியர்-நல்லூர் மங்கை யர்க்கரசி வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு சகோதரனும் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் (முன்னாள் வெளிக்கள உத்தியோகத்தர் மலேரியா தடை இயக்கம்), ஆறுமுகம் (முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர், முல்லைத்தீவு) மற்றும் Dr. வேணு காந்தன் (போதனா வைத்தியசாலை-யாழ்ப்பாணம்), ஸ்ரீரஞ்சன் (ஆசிரியர்-மு/இரணைப்பாலை மகா வித்தியாலயம்) தவசேசன்(லண்டன்), சாரதாதேவி, குணசீலன்(அபிவிருத்தி உதவியாளர்) உதயசீலன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (23.10.2014) வியாழக்கிழமை பி.ப 04 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் புதுக்குடியிருப்பு இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(சி/17098)(08)

தகவல்: குடும்பத்தினர்.


## விற்றுத் தீர்த்தல்

நெல்லியடி பஸ் நிலையத்திற்கு மிக அருகில் உள்ள பிரபல்யமான மோட்டார் வாகன உதிரிப்பாக விற்பனை நிலையத்தில் உள்ள உதிரிப்பாகங்கள் முழுவதுமாக விற்பனைக்கு உள்ளன. அந்த இடத்தில் தொடர்ந்து வியாபாரம் செய்வதற்கும் கடைக் கட்டடத்தை ஒப்பந்த அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கும் ஆவன செய்து தரப்படும்.

தொடர்பு: 077 314 4895, 077 351 0614

(சி/17202)(7.6)


## மரண அறிவித்தல்

### விக்கினேஸ்வரன் செஞ்சுடர்

(கோபி)

(பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி பழைய மாணவரும், சக்தி FM, [illegible] FM பகுதிநேர அறிவிப்பாளரும் ஆவார்)

(Software Engineering BCAS Campus)



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட விக்கினேஸ்வரன் செஞ்சுடர் (கோபி) 20.10.2014 அன்று அகாலமரண மடைந் தார்.

அன்னார் விக்கினேஸ்வரன்-இந்திர வதனி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ் சென்ற கனகரட்ணம் சேதுவின் பேரனும், வள்ளியம்மை, லீலாவதி, புஸ்பவதி, இந்தி ராணி, கைலேஸ்வரி ஆகியோரின் அன்பு பெறாமகனும் தெய்வேந்திரராஜா, இந்திர குமார் ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கல்கிஸை மகிந்த மலர்ச்சாலையில் காலை 9-3 மணிவரை நடைபெற்று, பின்னர் தக னக்கிரியைகள் கல்கிஸை இந்து மயா னத்தில் நடைபெறும். இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(சி/17136)(7.6.5) தகவல்: க.இந்திரகுமார் (மாமா)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

### நடேசு தமிழ்மோகன்

பிறப்பு 26.12.1957 — இறப்பு 23.09.2014

அன்புநிறை அப்பாவே!
அகம் நெகிழ்ந்தே அழுகின்றோம்
அவனியில் நீங்கள் நீங்கி
திங்கள் ஒன்று ஆனபோதும்
ஆறவில்லை எம்சோகம்.

(51972) (7.6.3)

இன்று (23.10.2014) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் காலை 6.00 மணியளவில் நடைபெறும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மடத்துக்கடவை,
அல்வாய் வடமேற்கு.

குடும்பத்தினர்
077 926 5065

## மரண அறிவித்தல்



### தெய்வானைபிள்ளை இராஜரட்ணம்

வட்டுக்கோட்டையைப் பிறப்பிட மாகவும், கொக்குவில் மேற்கை வசிப்பிட மாகவும் கொண்ட தெய்வானைபிள்ளை இராஜரட்ணம் நேற்றுமுன்தினம் (21.10.2014) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராஜரட் ணத்தின் அன்பு மனைவியும், தபோதினி, தனபாலன், சறோயினி, மாலினி, சந்திரபாலன், இராகினி, அருட்செல்வம், இந்திராணி, இதயராணி, திருட்செல்வம் ஆகியோரின் அன்புத் தாயும், தனநாயகம், வசந்தகுமாரி, அன்று, பாலசந்திரன், விஜயா, பகவத்சிங்கம், இந்திராணி, யோன்பப்ரிஸ்ற், குணபாலசிங்கம், கலைவாணி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.10.2014) வியாழக்கிழமை மு.ப.11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

(53426)
(12.6)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னலக்சுமி பரஞ்சோதி



கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப் பிடமாகவும் கொண்ட திருமதி அன்னலக்சுமி பரஞ் சோதி நேற்று (22.10.2014) புதன்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பரஞ்சோதியின் அன்பு மனைவியும், நிர்மலாதேவி (ஜேர்மனி), பாஸ்கரன் (ஜேர்மனி), கிருபாகரன் (சுவிஸ்), மாலினி (யாழ்ப் பாணம்), ஸ்ரீதரன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்ற வைகுந்தவாசன் சுபாசினி, புவேக்கா, சுதா, அம்பிகை பாதன் (சோதிஸ்ரோஸ்) ஆகியோரின் மாமியும், சுமித்தா, வினித்தா, அருணன், அருண்யா, நிருஜா, நளினாசினி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி), அச்சுதன் (யாழ்.இந்துக்கல்லூரி), கஜப்பிரியன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), கஜானா, மயூரிகா, யுகேஷ், அபிஜே, அபேக்கரன், ஹருணி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பலாலி வீதி,
கோண்டாவில் சந்தி.

(சி17203)
(12.6)

தகவல்: மருமகன் அம்பிகைபாதன்.
077 831 2284

# பெரியோர்களின் கருத்துகளை சிறுவர்கள் கவனத்தில் கொள்க

## வடக்கு கிழக்கு பிராந்திய நில அளவைப் பணிப்பாளர் கருத்து

மனிதனைப் படைத்த இறைவனை எம்மால் காண முடியாது. ஆனால் மனித சாயலில் தெய்வமாக வாழ்பவர்களை எம்மால் காண முடியும். எனவே அவர்களின் அரிய பெரிய கருத்துக்களை சிறுவர்களாகிய நீங்கள் கேட்டறிந்து அதற்கேற்ப வாழும் போது மகிழ்ச்சியான வாழ்க்கையை நீங்கள் பெறுவீர்கள். இவ்வாறு கூறினார் ஓய்வு பெற்ற வடக்கு, கிழக்கு பிராந்திய நில அளவைப் பணிப் பாளர் நாயகம் கனகராசா.

தெல்லிப்பழை ஆதார மருத்துவமனை புற்றுநோய் விடுதியில் திங்கட்கிழமை இடம்பெற்ற சிறுவர் தின நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு கூறினார். இதன் போது அவர் மேலும் கூறியதாவது:

நாம் அனைவரும் விரும்புவது மகிழ்ச்சியான வாழ்க்கையையே. எமது மனதில் மகிழ்ச்சி குடியிருந்தால் துன்ப, துயரங்கள் எமது மனங்களில் குடிகொள்ளமாட்டாது.

நாம் சிறுவர்களுக்கு மட்டுமல்ல முதியவர்களுக்கும் விழா எடுக்கின்றோம். ஏனெனில் அவர்களது தமது வாழ்நாளில் மேற்கொண்ட அரிய பல சாதனைகளை நல்ல சிந்தனைகளை வாழ்க்கை முறைகளை, சிறுவர்களுக்கு கற்றுக் கொடுப்பதற்காகவும் முதியோர்களை மகிழ்விப் பதற்காகவுமே அவ்விதம் செய்கிறோம்.

எமது மன உறுதி, தன்னம்பிக்கை, சகிப்புத்தன்மையுடன் வாழ்ந்தால் அதுவே மகிழ்ச்சியான வாழ்க்கையாகும். எனவே சிறு வர்களாகிய நீங்கள் இவற்றை மனதில் இருத்தி இந்த நாட்டின் எதிர்காலத் தலைவர்களாக வாழ வேண்டும்- என்றார். (வ-36)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/கைதடி விக்கினேஸ்வர வித்தியாலயத்தில் 2014 இல் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களான

**பூ.சாருஜா -182, பா.தர்மினி -174, செ.திலக்ஷி -162**

ஆகியோரையும் 100 இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற




| | |
|---|---|
| கி.கம்ஷிகன் | - 155 |
| செ.கோபினா | - 145 |
| சி.சர்மிகா | - 144 |
| செ.அஜந்தா | - 142 |
| ஸ்.அஜீனா | - 140 |
| சோ.யேபிஷன் | - 139 |
| கு.சஜீபன் | - 135 |
| ச.கயல்விழி | - 133 |
| கி.டிசாந் | - 117 |
| சி.சம்ஷிஜா | - 117 |
| க.டயாளினி | - 109 |
| பி.யானஸ்சன் | - 101 |
| ஜெ.சர்மி | - 100 |

ஆகியோரைப் பாராட்டுவதோடு, இவர்களது வெற்றிக்கு உழைத்த அதிபர் சு.சிவானந்தன், பகுதித்தலைவர் திருமதி த.சூரியகுமாரன், வகுப்பாசிரியர் திருமதி கௌ.சிவசுதன் மற்றும் ஏனைய ஆரம்பக் கல்வி ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**பாடசாலைச் சமூகம்,**
**யா/ கைதடி விக்கினேஸ்வர வித்தியாலயம்.**

(53427)(5.6)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




06.10.2014 திங்கட்கிழமை தேசிய கல்வி நிறுவகத்தில் நடைபெற்ற ஆசிரியர் பிரதீபா பிரபா விருது வழங்கும் நிகழ்வில் "பிரதீபா பிரபா" விருதைப் பெற்ற

திருமதி
**சாரதாபவானி சுந்தரலிங்கம்**
(ஆசிரியை யா/சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி)
அவர்களையும்
**திருமதி சியாமளா குகதாசன்**
(ஆசிரியை யா/கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலை) அவர்களையும்
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:
மதியழகன் லனிதா குடும்பம்
பரணீதரன் உமாநிதி குடும்பம்
சுரேந்திரன் தனிதா குடும்பம்
முல்லைமாறன் மஞ்சுளா குடும்பம்

## ஆபரண தொழிற்றுறையினருக்கான பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்றுறை மன்றமும் தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையும் இணைந்து சிறிய மற்றும் நடுத்தர ஆபரண தொழில் துறையினருக்கான பயனுறுதிவாய்ந்த பயிற்சிப்பட்டறை ஒன்றினை காலத்தின் தேவை கருதி எதிர்வரும் 29.10.2014ஆம் திகதி யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்றுறை மன்ற கேட்போர் கூடத்தில் ஒழுங்கு செய்துள்ளது.

"நவீன ஆபரண வடிவமைப்பு நுட்பங்கள், அவற்றின் வடிவமைப்பு தொடர்பிலான புதிய பரிமாணங்கள், சர்வதேச தரநிர்ணயம் மற்றும் சந்தை வாய்ப்புக்கள்" முதலான விடயங்களை உள்ளடக்கியதாக மேற்படி நிகழ்வு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்படி பயிற்சிப்பட்டறையில் பங்குபற்றுவதற்கு ஆர்வமுள்ளோர் இலக்கம் 124, இராசாவின்தோட்டம் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்றுறை மன்ற அலுவலகத்துடன் எதிர்வரும் 28.10.2014ஆம் திகதிக்கு முன்னர் தொடர்புகொண்டு தங்களது பங்குபற்றுதலை உறுதிப்படுத்த முடியும். மேலதிக விவரங்களுக்கு 021 222 6609 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்பு கொள்ளவும்.

(சி/17092) (7.6.3)

குறிப்பு : அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் தங்களது பங்குபற்றுதலை முன்கூட்டியே உறுதிப்படுத்தும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

## தெரிவுப் பரீட்சை

கரணவாய், ஒக்.23

ஜோன் கீல்ஸ் பவுண்டேசனும், கேற்வே நிறுவனமும் இணைந்து நடத்தும் ஆங்கிலப் புலமைப்பரிசிலுக்கான தெரிவுப் பரீட்சை நாளை மறுதினம் சனிக் கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் நெல்லியடி கேற்வே நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பரீட்சையில் தோற்றவுள்ள வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்குட்பட்ட மாணவர்களின் பெயர் விவரங்கள் அந்தந்தப் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அதுதொடர்பான மேலதிக விவரங்களையும் அனுமதி அட்டைகளையும் அலுவலக நேரங்களில் நெல்லியடியில் அமைந்துள்ள கேற்வே நிறுவனத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-108)

## சுனாமி ஒத்திகை

யாழ்ப்பாணம், ஒக்.23

இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் வேண்டுகோளுக்கு இணங்க தேசிய ரீதியான சுனாமி ஒத்திகை நிகழ்வொன்று இன்று வியாழக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு பருத்தித் துறை பிரதேசத்தில் நடைபெற வுள்ளது.

பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவில் உள்ள வல்வெட்டித் துறை வடமேற்கு, வல்வெட்டித்துறை தென் மேற்கு ஆகிய கிராம உத்தி யோகத் தர்கள் பிரிவுகளிலேயே மேற்படி ஒத்தகை நடை பெறவுள்ளது. எனவே இந்த ஒத்திகை செயற்பாடு குறித்து மக்கள் எவரும் குழப்பமடையத் தேவையில்லை என்று யாழ். மாவட்ட மேல திக அரச அதிபர் ரூபினி வரதலிங்கம் அறிவுறுத்தியுள்ளார். (வ-ரி)

## வறட்சி பாதித்த குடும்பங்களுக்கு உலர் உணவு

தென்மராட்சி, ஒக்.23

தென்மராட்சி பிரதேசத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஒரு மாதத்துக்கான உலர் உணவுப்பொருள்கள் நாளை தொடக்கம் விநியோகிக்கப்படவுள்ளன.

கொடிகாமம், சாவகச்சேரி, கைதடி ஆகிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் இந்த நிவாரண உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்படவுள்ளதாகவும், தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களின் பட்டியலை அந்தந்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங் களில் பார்வையிடலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

## பொதுக்கூட்டம்

பளை, வேம்பொடுகேணி சீ.சீ.த.க. பாடசாலையின் பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பாடசாலை அபிவி ருத்திக் குழு ஆகியவற்றின் பொதுக்கூட்டம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். பாடசாலை வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள கட்டடத் தொகுதி திறப்புவிழா மற்றும் மின்சார இணைப்பு உட்பட்ட பல்வேறு விடயங்கள் கூட்டத்தில் ஆராயப்படவிருப்பதால் பெற்றோர், பழைய மாணவர்கள், ஆர்வலர்கள், நலன்விரும்பிகள் ஆகியோரை இதில் கொள்ளுமாறு அதிபர் க.சண்முகதாஸ் அறிவித்துள்ளார். (வ-9)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




கஜேந்திரன் நிர்மலா
தம்பதியரின் செல்வப்புதல்வன்
**இசையாழன்.**
2014 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் **178** புள்ளிகளைப் பெற்று மட்டு/கொக்கட்டிச்சோலை இராமகிருஸ்ண மிசன் வித்தியாலயத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டமைக்காக மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*வாழ்த்துவோர் :*
அப்பம்மா, பெரியமாமி குடும்பம்,
சின்னமாமி குடும்பம், சித்தப்பா குடும்பம்.
**புன்னாலைக்கட்டுவன் தெற்கு, சுன்னாகம்.**

Best Wishes

(53420)(7.3)

## உளங்கனிந்த நன்றிகள்



பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட அழைப்பை ஏற்று, எனது பவளவிழாவில் கலந்து சிறப்பித்த அனைத்து கலைஞர்கள், ஆர்வலர்கள், நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

விழாவில் மங்கல இசை, சிறப்பு நாதஸ்வர அரங்கு, இசையரங்கு நிகழ்த்திய கலைஞர்கள், ஆசியுரை வாழ்த்துரை வழங்கியோர் எனது உள்ளத்தில் என்றென்றும் வீற்றிருப்பார்கள்.

நிகழ்வின் தலைவர், நிகழ்வுத் தொகுப்பாளர், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர், இளங்கலைஞர் மன்றத்தின ருக்கும் எனது நன்றிகள் என்றென்றும் உரித்தாகுக.

அன்பன்
**சுப்பையா கணபதிப்பிள்ளை.**

(53599)(12.3.6)

**SHANTHIHAM**
Association for Health & Counselling

## சாந்திகம் உளவளத்துணை நிலையம்

**பதவி வெற்றிடம் - உளவளத்துணையாளர்**

கடந்த 25 வருடங்களாக உளவளத்துணை மற்றும் சமுதாயமட்ட உளமருத்துவ - உளசமூகத் துறையில் சேவை புரியும் எமது நிறுவனம் கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களில் சமுதாயமட்ட உளசமூக மேம்பாடு / உளவளத்துணைச் செயற்பாடுகளை மேற்கொள்ளவுள்ளது என்பதுடன் இப்பிரதேசங்களில் அர்ப்பணிப்புடன் பணியாற்றக்கூடிய பொருத்தமான உளவளத்துணையாளர்களை நாம் உள்ளீர்க்க விரும்புகிறோம். இத்திட்டம் யுஎஸ் எயிட் நிதியுதவியுடன் செயற்படுத்தப்படும் ஒரு நிகழ்ச்சித் திட்டமாகும்.

**தகுதிகள்**

- ★ க.பொ.த உயர்தரத்தில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
- ★ அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் உளவளத்துணை டிப்ளோமாப் பட்டம் அல்லது அதற்கு நிகரான கல்வித் தகைமைகளைப் பெற்றவராயிருத்தல் அவசியம்.
- ★ உளவளத்துணைப் பணிகளில் குறைந்தது இரண்டு வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- ★ இப்பணிக்கான ஒழுக்க நடைமுறைகளைப் பின்பற்றி நடப்பவராகவும் மிகுந்த அர்ப்பணிப்புடன் செயற்படக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.
- ★ சாந்திகம் நிறுவனத்தையும், அதன் விழுமியங்களையும் புரிந்து அவற்றைப் பிரதிபலித்துச் செயற்படக்கூடியவராக இருத்தல் அவசியம்.
- ★ மேற்குறிப்பிடப்பட்ட இடங்களில் தங்கியிருந்து வேலை செய்யக் கூடியவராக இருத்தல் வேண்டும்.
- ★ கணினியைக் கையாளும் திறனுடன், ஆங்கில அறிவுடையவராக இருத்தல் விரும்பத்தக்கது.

**விண்ணப்பிப்பதற்கான இறுதித்திகதி - 31.10.2014**

பொருத்தமானவர்கள் எனக் கருதப்படும் விண்ணப்பதாரிகள் மட்டும் நேர்முகத் தேர்வுகளுக்கு அழைக்கப்படுவார்கள்.

மேலதிக விவரங்களுக்கும், சுயவிவரங்கள் அடங்கிய விண்ணப்பங்களைக் கையளிப்பதற்கும் அல்லது தபால் மூலம் அனுப்புவதற்கும் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

**நிறைவேற்றுப் பணிப்பாளர்,**
**சாந்திகம்,**
**உளவளத்துணை நிலையம்,**
**இல. 8,8/1 கற்பக விநாயகர் வீதி, கச்சேரி நல்லூர் வீதி**
**யாழ்ப்பாணம்.**
**021 222 3338** மின்னஞ்சல் முகவரி:psych@sltnet.lk

(C/1708)(5.6)

## இலவச கருத்தரங்கு இன்று

வடமராட்சி, ஒக்.23

விவசாயம், மீன்பிடி, கோழிவளர்ப்பு, விலங்கு வேளாண்மை தொடர்பாக கோப்பாய் லயன்ஸ் கழகம் நடத்தும் இலவசக் கருத்த ரங்கு இன்று வியாழக் கிழமை காலை 8.30 மணிக்குக் கோப்பாய் தேசிய கல் வியியல் கல்லூரிக்கு அருகில் உள்ள கட்டடத்தில் நடைபெறவுள்ளது. லயன் வி.ஸ்ரீகுமரன் தலைமையில் இடம்பெறும் இந்தக் கருத்தரங்கில் பிரதம விருந்தினராக வலி.கிழக்கு செஞ்சிலுவைச் சங்கச் செயலாளர் இ.மயில்வாகனமும், சிறப்பு விருந்தினராக சுன்னாகம் ஹற்றன் நஷனல் வங்கிக் கிளை முகாமையாளர் செ.செந்தூர னும் கலந்து கொள்வார்கள். கருத்தரங்கில் கீலந்து கொள்ளும் பயனாளிகள் வங்கிக் கிளையில் சுய தொழில் முயற்சிக்கு கடன் பெற்றுக் கொள்ளவும் போதிய ஆலோசனைகள் வழங்கப்படும். (வ-173)

## உயர்தர மாணவர்களுக்கான வினாடிவினாப் போட்டி நாளை

யாழ்ப்பாணம், ஒக்.23

யாழ்ப்பாணம் சம்பத் வங்கிக் கிளையால் யாழ். வலய உயர்தர பாடசாலை மாணவர்களுக்கு இடையில் நடத்தப்படும் வினாடி வினாப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் யூ. எஸ். ஹொட்டேல் அன்ட் றெஸ்ரோ ரண்டில் நடைபெறவுள்ளது என்று கிளை முகாமையாளர் அறிவித்துள்ளார். (ஒ)

## 80 மணி நேரம் சமூகப்பணிக்கு உத்தரவு

தென்மராட்சி, ஒக்.23

மதுபோதையில் பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் குழப்பம் விளைவித்த நபருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்ததுடன் 80 மணித்தியாலங்கள் சமூகப் பணி யில் ஈடுபடுமாறு நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் உத்தரவிடப்பட்டது.

இவ்வாறான குற்றங்கள் புரிந்த மேலும் மூவருக்கு நேற்று 80 மணித்தியாலங்கள் சமூகப் பணியில் ஈடுபடுமாறு உத்தரவிடப்பட்டது.

பொலிஸாரால் தாக்கல்செய்யப்பட்ட நான்கு வழக்குகள் நேற்று முன்தினம் தனித் தனியாக விசாரிக்கப்பட்ட போது குற்றவாளியாகக் காணப்பட்ட நால்வரையும் 80 மணித்தியாலங்கள் சமூகப் பணியில் ஈடுபடுத்த நீதிமன்ற சமுதாயங்கள் சீர்திருத்தப் பிரிவில் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டது. (வ-9)

## திருவிளக்கு பூசை

அரியாலை வெட்டுக்குளம் சிறி புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் கௌரி விரதத் திருவிளக்குப் பூசை இன்று வியாழக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு இடம்பெறும் அபிஷேகத்துடன் ஆரம்பமாகிறது. தொடர்ந்து மாலை 5 மணிக்கு விளக்குப் பூசையும் தொடர்ந்து அம்பாள் உள்வீதி வலம் வருதலும் இடம்பெறும் அத்துடன் மாலை 6.30 மணிக்கு காப்புக்கட்டுதல் இடம்பெறும். (வ)

## நூலகக் கண்காட்சி

தென்மராட்சி, ஒக்.23

சாவகச்சேரி நுணாவில் பொது நூலகத்தினர் தேசிய வாசிப்பு மாதநிகழ்வுகளில் ஒன்றாக நாளை மு.ப.9 மணி தொடக்கம் நூலக எல்லைக் குட்பட்ட பகுதிகளில் உள்ள முன்பள்ளிகளில் நடமாடும் நூலக கண்காட்சியையும் முன்பள்ளி மாணவர்களுக்கான போட்டிகளையும் நடத்தவுள்ளனர்.

முன்பள்ளி மாணவர்களுக்கிடையில் கதை கூறல், எழுத்துச் சேர்த்தல், உயிர் மெய் எழுத்துக்கள் சேர்த்தல், வர்ணம் தீட்டுதல், இலக்கங்களை கண்டு பிடித்தல் ஆகிய போட்டிகள் நடத்தப்படவுள்ளதாக நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம் பிள்ளை தெரிவித்தார். (வ-9)

---

உதிரத்தே உறையும்

# 27 ஆம் ஆண்டு நினைவலைகள்

அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து
இன்புற்றார் எய்துஞ் சிறப்பு

அன்னை மடியில் 08 05 1948



அம்பாள் அருளடியில் 22 10 1987

## திருமதி செல்வராணி தேவமதுரம்

( முன்னாள் நூலகர் – சாவகச்சேரி பொது நூலகம் )

திதி : அமாவாசை – 23.10.2014

**திதி வெண்பா**

**ஆண்டு பிரபவத்தில் ஐப்பசிஈர் பத்தொன்றில்**
**ஈண்டு மமாவாசை யாந்திதியில் - ஆண்டவன்தாள்**
**சென்றாள் “செல்”பட்டுச் செல்வரா ணிச்சீராள்**
**தன்னுலகு விட்டுத் தனித்து.**

அவனியில் அம்மாவென அழைத்திட ஆருளரோ ?
அன்பின் ஆலயமாய் இல்லத்து ஒளிவிளக்காய்
நிவப்புடன் நிறைந்து நூலகராய் பணியாற்றி
நல்லறம் நலங்காத்து நனிதிலங்கும் வாழ்நாளில்
அவலமிகு அதிகாலை அடுக்களை அடைந்தவேளை
அந்தகன் உருவிலான எறிகணைக் கிலக்காகி
சிவபிரான் பாகத்தாள் சீர்கழல்கள் சென்றடைந்த
செல்வராணிச் சீராளை சிந்தையுள் சேவிப்போம்!
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

“கேந்திரவதிகை”
07, பூமகள் வீதி, அரியாலை மேற்கு,
யாழ்ப்பாணம்.

நெஞ்சத்தே நின்றகலா
நின்நினைவில்
**குடும்பத்தினர்**

---

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

அமரர்

## இராசலக்ஷ்மி கருணேஸ்வரன்



மலர்வு 15.02.1959 உதிர்வு 03.11.2013

எம் உயிரின் பாதி
உன்னுடன் உதிர்ந்ததம்மா
ஆண்டுகள் ஆயிரம் அகன்றாலும்
ஆருயிர் அன்னையே!
நீங்கள் தந்த அன்பின் நிழலில்
வாழும் உங்கள்.....
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

குடும்பத்தினர்.
Near RC Church Uduppiddy.

---

# மரண அறிவித்தல்



## விஸ்வலிங்கம் முத்துக்குமார்

யாழ்.அல்லைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், தற்போது லண்டனில் வசித்துவந்தவருமாகிய விஸ்வலிங்கம் முத்துக்குமார் 21.10.2014 செவ்வாய்க்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் பராசக்தியின் அன்புக் கணவரும், ஜெயக்குமார், சந்திரா, பாலகுமார், கண்ணகுமார், சந்திரகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் பார்வதிப்பிள்ளை (கனடா), வல்லிபுரநாதன் (வர்த்தகர் - புளியங்கூடல், கொழும்பு), கமலாதேவி (கனடா), இராசலிங்கம் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள்பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: வி.வல்லிபுரநாதன் (சகோதரன்).
077 903 7455

தெகிவளை. (சி17133)(12.6)

---

# மரண அறிவித்தல்

## பூபாலராஜா மயூரன்



முள்ளானை இளவாலையைப் பிறப்பிடமாகவும் கல்பிட்டி றோட், நுரைச்சோலை, புத்தளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பூபாலராஜா மயூரன் நேற்று முன்தினம் (21.10.2014)செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் பூபாலராஜா-பத்மாவதி தம்பதியரின் அன்பு மகனும், துசாயினி, சிந்துசன், லக்ஷாயினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுகந்தனின் அன்பு மைத்துன ரும் கார்த்திகாவின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.10.2014) வியாழக்கிழமை ந.ப.12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முள்ளானை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
072 748 4082

முள்ளானை, இளவாலை. (53423)(5.3)

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## இராமசாமி கிருஷ்ணசுந்தரம்

தோற்றம் 14.12.1954 மறைவு 03.11.2013

திதி: அமாவாசை
(23.10.2014)

எங்கள் அன்புத் தெய்வமே!
ஓராண்டு நெருங்கினாலும்
அப்பா உங்கள் நினைவு
மனதிலேயே நிலைத்திருக்கின்றது
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

35, சீனிவாசகம் வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

என்றும் அன்புக்குரிய
மனைவி, மகன்

---

# ஈராண்டு நினைவஞ்சலி

மலர்வு 09 - 01 - 1988



உதிர்வு 30 - 10 - 2012

## அமரர் யோகீஸ்வரன் நிஷாந்தன்

திதி: 23.10.2014

**ஆண்டுகள் இரண்டு ஆகிவிட்டதையா**
**எங்கள் ஆறாத்துயர் இன்னும் ஆறவில்லை**
**ஆண்டவன் திருவடியை அடைந்து**
**ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்.**
**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

கைதடி மேற்கு,
கைதடி.

என்றும் உம் நினைவில்
குடும்பத்தினர்.

(53410)(5.6.3)

# சாவகச்சேரியில் சட்டம், ஒழுங்கு பேண தமிழ் பொலிஸ் வேண்டும்

## நகர சபையின் கூட்டத்தில் தீர்மானம்

தென்மராட்சி, ஒக் 23
சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளை வன்செயல்கள் இல்லாத பிரதேசமாக மாற்றச் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் தமிழ் மொழி தெரிந்த பொலிஸார் மேலதிகமாகச் சேர்க்கப்படவேண்டுமெனச் சாவகச்சேரி நகர சபையின் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் குறைந்த அளவு தமிழ் மொழி தெரிந்த பொலிஸாரே கடமை புரிகின்றனர். அவர்களும் கடமையின் நிமித்தம் வெளியிடங்களுக்குச் செல்ல வேண்டியிருப்பதால் பொலிஸ் நிலையத்தில் செய்யப்படும் முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகள் காலதாமதமாகவே மேற்கொள்ளப்படுகின்றன.
இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளப் பொலிஸார் வெளிக் களப்பணிக்காக செல்ல வேண்டியுள்ளது. இதனால் முறைப்பாடு சம்பந்தமான விசாரணைகளுக்கெனப் பொலிஸ் நிலையத்துக்குச் செல்லும் பொதுமக்கள் நீண்ட நேரம் பொலிஸ் நிலையத்தில் காத்திருக்க வேண்டியுள்ளது.
இந்த நிலையைக் கருத்தில் கொண்டு சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் தமிழ் மொழி தெரிந்த பொலிஸாரை மேலதிக மாக நியமிக்க வடக்கு மாகாண முதலமைச்சர் ஊடாக பொலிஸ்மா அதிபரைக் கோரவேண்டுமென உறுப்பினர் அ.பால மயூரன் பிரேரணையை முன்வைத்தார். பிரேரணையை அனைத்து உறுப்பினர்களும் ஏற்றுக் கொண்டதால் உரிய நடவடிக்கை எடுப்பதெனத் தீர்மானிக்கப்பட்டதாக நகர சபை தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தெரிவித்தார். (து-9)

# யாழ். நகரில் பொருள்களின் காலாவதி திகதியில் மோசடி

## நுகர்வோரே அவதானத்துடன் இருங்கள்

யாழ்ப்பாணம், ஒக். 21
பொருள்களின் வெளிப் பெட்டியில் ஒரு காலாவதித் திகதியும், அதனுள் காணப்படும் பொருளின் லேபிளில் இன்னொரு காலாவதித் திகதியும் பொறிக்கப்பட்டு யாழ். நகரப் பகுதியில் பொருள்கள் விற்பனை செய்யப்படுவது கண்டறி யப்பட்டுள்ளது.
அத்துடன் நிறைகுறைவான பாண் விற்பனை, காலாவதியான சொக்கலேட், பிஸ்கட், முகப்பூச்சு, மருந்து விற்பனை என்பனவும் தொடர்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



யாழ்.மாவட்டத்தில் கடந்த மாதம் மாத்திரம் மேற்குறிப்பிட்ட விதமான சட்டவிரோத விற்பனையில் ஈடுபட்ட 53 வர்த் தகர் களிடமிருந்து ஒரு லட்சத்து 89 ஆயிரம் ரூபா தண் டப் பணமாக அறவிடப்பட்டுள் ளது.
குறிப்பாக யாழ்.நகரப் பகுதியில், குறிப்பிட்ட சில பொருள்களின் வெளிப் பெட்டியில் ஒரு காலாவதித் திகதியும், அந்தப் பெட்டியினுள் உள்ள பொருளின் லேபிளில் இன்னொரு காலாவதித் திகதியும் பொறிக்கப்பட்டுள்ளன.
இவ்வாறு மோசடி செய் தும் பொருள்கள் விற்பனை செய்யப்பட்டு வருவது கண்டறியப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (து-5)

# சாவகச்சேரி பொதுச் சந்தையில் 3 நாள்களில் 5 லட்சம் ரூபா வரி

## தெற்கு வியாபாரிகள் வருகையால்

தென்மராட்சி, ஒக்.23
தீபாவளி வியாபாரத்துக்காக தென்னிலங்கை வியாபாரிகளின் வருகையால் சாவகச்சேரிப்பொதுச்சந்தையில் கடந்த 19ஆம், 20ஆம்,21ஆம் திகதிகளில் ஐந்து லட்சம் ரூபாவை வரியாக அறவிட்டது சாவகச்சேரி நகரசபை.
பொதுச் சந்தையை நகரசபை நிர்வாகமே நடத்துவதால் வியாபாரிகளிடம் ஏனைய சந்தைகளை விடக் குறைந்த வரியே அறவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.
இதேவேளை, சாவகச்சேரி பொதுச் சந்தையில் என்றுமில்லாத அளவுக்கு உடுபுடைவைகள் உட்பட பொருள்கள் வாங்கப் பல்லாயிரக்கணக்கான மக்கள் வருகை தந்தனர்.
மலிவு விலையில் பொருள்கள் விற்கப்பட்டதால் தென்மராட்சி, பூநகரி, பளை, வடமராட்சி கிழக்கு, வலிகாமம், போன்ற பிரதே சங்களைச் சேர்ந்த மக்கள் பொருள்கள் வாங்கச் சாவகச் சேரிச் சந்தைக்கு வந்திருந்த னர்.
நேற்றுமுன்தினம் மாலை சந்தைக்குள் உடுப்பு வகைகள் விற்பனைப் பகுதிக்குள் செல்ல முடியாத அளவுக்குச் சனக்கூட்டம் காணப்பட்டது.
தமது பிரதேசங்களில் அங்காடி வியாபாரிகள் வருகை தருவதில்லை.
இதனால் பண்டிகைக் காலங்களில் சாவகச்சேரிக்கு வருவதாகவும் முன்னைய வருடங்களை விட இம்முறை நிறைய வெளியூர் வியாபாரிகள் வருகை தந்திருந்ததால் உடுபுடைவைகளை மலிவு விலையில் பெற முடிந்ததாகவும் பொருள்கள் வாங்க வந்த பூநகரி, வடமராட்சி கிழக்கு, பளை பிரதேச மக்கள் தெரிவித்தனர். (து-9)



தீபாவளித் திருநாளான நேற்றுப் புதன்கிழமை நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் இடம்பெற்ற விசேட பூசை வழிபாடுகளில் பெரும் எண்ணிக்கையான இந்துக்கள் கலந்து கொண்டனர். யாழ்.நகரில் அனைத்து ஆலயங்களிலும் தீபாவளித் தினத்தையொட்டி சிறப்புப் பூசைகள் இடம்பெற்றன. தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள இந்து ஆலயங்களிலும் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்றன. நேற்றுக் காலை தொடக்கம் புத்தாடை அணிந்து அடியார்கள் ஆலய தரிசனம் மேற்கொண்டனர். (து-7-9-17)

# கொடிகாமம் சந்தைக்கு வர்ணப் பூச்சு

கொடிகாமம், ஒக்.23
கொடிகாமம் நகர பொதுச் சந்தைச் சுவர்கள் வர்ணம் பூசி அழகுபடுத்தப்பட்டுள்ளன.
பல ஆண்டுகளாக இந்தச் சுவர்கள் வர்ணம் பூசப்படாமல் இருந்த நிலையில் சாவகச்சேரி பிரதேச சபையின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் இவை வர்ணம் பூசப்பட்டு அழகுபடுத்தப்பட்டுள்ளன.
குறித்த சந்தைப் பகுதியில் இயங்கும் பழங்கள் விற்பனை செய்யும் மண்டபம் அமைந்த பகுதியின் தரை கற்கள் பரவிய நிலையில் ஒழுங்கற்றதாக உள்ளது.
இந்தப் பகுதியில் இருந்து மேல் மண்டபப் பகுதிக்குச் செல்லும் பாவனையாளர்கள் கற்களினால் சிரமப்படுகின்றனர்.
இங்கு வியாபாரம் செய்யும் பழ வியாபாரிகள் அழுகிய பழங்களை குறித்த பகுதியில் நாளாந்தம் வீசி வருவதால் அசுத்தமான அழுக்கடைந்த பகுதியாக நாளாந்தம் காட்சியளிக்கின்றது.
இந்தப் பகுதியை ஒழுங்குபடுத்திச் சீரமைக்க ஆவன செய்யவேண்டும் எனச் சந்தைக்கு வரும் பாவனையாளர் தரப்பில் கோரப்பட்டுள்ளது. (து-122)

# மழை நீர் சேகரிப்புத் தொட்டி அமைப்பது கட்டாயமானது

தென்மராட்சி, ஒக் 23
சாவகச்சேரி நகர்ப் பகுதியில் குடிதண்ணீர்த் தட்டுப்பாட்டை நீக்க மழை நீர் சேகரிப்புத்தொட்டிகள் அமைக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்த நகர சபை நடவடக்கை எடுக்க வேண்டும் எனச் சாவகச்சேரி நகர சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.
சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கட்டடங்கள் அமைக்க விண்ணப்பிப்போர் கட்டடங்களில் மழை நீர் சேகரிப்புத் தொட்டி அமைக்க வேண்டுமென்ற விதிமுறை கட்டாயமாக்கப்படல் வேண்டும்.
அத்துடன் சபை எல்லைக்குட் பட்ட பகுதியில் குழாய் கிணறுகளால் பாதிப்பு ஏற்படாதிருக்க குழாய் கிணறு அமைப்பதாயின் சபையின் முன்னனுமதி பெறவேண்டும் என்ற பிரேரணையை உறுப்பினர் அ.பாலமயூரன் கூட்டத்தில் சமர்ப்பிப்பித் திருந்தார். இந்தப் பிரேரணை ஏற்றுப் கொள்ளப்பட்டதாகத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தெரிவித்தார். (து-9)

# ரின் பியர் வாங்கும் பணத்துக்கு 11 முட்டை வாங்கி உண்ணுங்கள்

## மதுப்பாவனையாளர்களுக்கு வணிகர் கழகம் அறிவுரை

யாழ்ப்பாணம், ஒக் 23
மது அருந்தும் வழக்கத்தைக் கைக்கொள்ளும் இளைஞர்கள் மற்றும் குடும்பஸ்தர்கள் ஒரு ரின் பியருக்காகச் செலவு செய்யும் பணத்தில் 11 முட்டைகள் வாங்கி குடும்பத்துடன் சாப்பிடலாம். நிறை போசாக்கும் கிடைக்கும். அல்லது மூன்றரைப் போத்தல் பால் வாங்கிக் குடித்து நிறை போசாக்கைப் பெறமுடியும் என்று கூறியுள்ள வணிகர் கழகம். குடிகாரர்களும்குடும்பப் பெண்களும் இனிமேலாவது இதனைக் கருத்தில் கொண்டு செயற்படவேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளது.
இது தொடர்பில் யாழ்.வணிகர் கழகம் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
கடந்த வருடம் யாழ். மாவட்டத்தில் உள்ளவர்கள் மாத்திரம் பியர் அருந்துவதற்காக 4 லட்சத்து 56 ஆயிரம் ரூபாவைச் செலவிட்டுள்ளனர். சாராயம் மற்றும் பிற மதுபானங்களுக்கு என இங் குள்ளவர்கள் மேலும் லட்சக் கணக்கில் பணம் செலவிட்டுள்ளனர்.



யாழ்.மாவட்டத்தில் பலர் வறுமையால் பாதிக்கப்பட்டள்ளனர். குடிகாரர்களின் குடும்பங்கள் பல வறுமையால் வாடுகின்றன. ஆனால் அவ்வாறு வறுமை நிலை இருந்த போதும் குடியை மட்டும் அந்தக் குடும்பங்களின் தலைவர்கள் கைவிடவில்லை. அதனால் ஒட்டு மொத்த குடும்பமும் பாதிக்கப்படுகிறது.
இளைஞர்கள், குடும்பஸ்தர்கள் அருந்தும் ஒரு ரின் பியரின் விலை சுமார் 180 ரூபா. அந்தப் பணத்துக்கு 11 முட்டைகள் வாங்கி குடும்பத்துடன் உணவு சமைத்து உண்டு மகிழலாம். அல்லது மூன்றரைப் போத்தல் பால் வாங்கி குடும்பத்துடன் அருந்த முடியும்.
ஆனால் இதுகுறித்து எவரும் சிந்திப்பதில்லை.
குடும்பஸ் தர்களோ, இளைஞர்களோ, குடும்பப் பெண்களோ அது பற்றி எள்ளளவும் சிந்திப்பதில்லை. ஆனால் அவர்கள் அது தொடர்பில் சிந்திக்க வேண்டும்.
ஓவ்வொரு மனைவியும் தனது கணவன் மது அருந்துவது தொடர்பிலும், பெற்றோருக்குத் தெரியாமல் மகன் மார் மது அருந்துவது தொடர்பில் பெற்றோரும் கவனம் செலுத்த வேண்டும்.
பெற்றோருக்குத் தெரியாமல் மது அருந்தும் இளைஞர்களும் இது தொடர்பில் சிந்திக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து-4)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679953, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ஐ.தே.கவும் சஜித்தின் கருத்தும்

விடுதலைப்புலிகள் மீதான தடைகளை நீக்குவது தொடர்பான தீர்மானம் சட்டரீதியானதென்வும் அரசியல் ரீதியானதல்ல எனவும் ஐரோப்பிய ஒன்றிய பொது நீதிமன்றம் நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றத்தின் தீர்ப்பு சட்ட ரீதியான தீர்ப்பே தவிர, ஐரோப்பிய ஒன்றிய நாடு களால் எடுக்கப்பட்ட அரசியல் ரீதியான தீர்மானம் அல்ல என்றும் சட்டவாக்கத்துறையிலிருந்து நீதித்துறை முறைமையைத் தனியாக வேறுபடுத்துதல் ஆரோக்கியமான ஜனநாயகத்தின் முக்கியமான தனித்துவம் என்றும் நீதிமன்றம் விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றிய பொது நீதிமன்றம் சமீபத்தில், புலிகள் மீதான ஐரோப்பிய ஒன்றியத்தின் தடையை நீக்கக் கோரி வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பை வழங்கியது. இந்தத் தீர்ப்பின் பின்னணியில் ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரசிங்க செயற்பட்டுள்ளதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்தன. புலிகள் மீதான தடை நீக்கத்துக்கும், ரணில் விக்கிரமசிங்கவின் லண்டன் விஜயத்துக்கும் முடிச்சுப்போடப்பட்டது. ரணிலின் லண்டன் விஜயத்தை நீதிமன்றத் தீர்ப்புடன் தொடர்புபடுத்தி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூட பகிரங்கமாகக் குற்றஞ் சாட்டினார். ஐ.தே.க. மறுப்புத் தெரிவித்தும் கூட ஜனாதிபதியோ அல்லது அரசின் சிரேஷ்ட அமைச் சர்களோ மறுப்பை ஏற்கத் தயாராக இருக்கவில்லை.

இப்படியான நிலையிலேயே ஐரோப்பிய நீதிமன்றம் அறிக்கை ஒன்றை நேற்று முன்தினம் வெளியிட்டது. தனது தீர்ப்பு அரசியல் ரீதியானது அல்ல என்றும் சட்டரீதியானது என்றும் தெளிவுபடுத்தி உள்ளது.

நீதிமன்றத்தின் இந்த அறிவிப்பை இலங்கை அரசு ஏற்கும் என்று எதிர்பார்க்கமுடியாது. ஏனெனில், அரசு ஓர் உள்நோக்கத்துடன் செயற்படுகிறது. ஐரோப் பிய ஒன்றிய நீதிமன்றத் தீர்ப்பைப் பயன்படுத்தி ஐ.தே.க.மீது புலிச்சாயம் பூசுவதே திட்டம். ஜனவரி மாதம் நடைபெவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.கவைத் தோற்கடிக்க இது உதவுமென நம்பப் படுகிறது. இப்படியான நிலையில் தென்னிலங்கை மக்களை சமாதானப்படுத்த ஐ.தே.க. எடுத்த அஸ்திரம் புலி எதிர்ப்பு அஸ்திரம்தான். இதனை எய்திருப்பவர் ஐ.தே.கவின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பௌத்த, சிங்கள வாக்குகளிலேயே ராஜபக்ஷ முழுமையாகத் தங்கியுள்ளார். தமிழ் - முஸ்லிம் வாக்குகளை அவர் பெரியளவில் எதிர்பார்க்கவில்லை. ஆனால், ஜனாதிபதித் தேர்தலில் எதிரணி சார்பாக அல்லது ஐ.தே.க.சார்பாக ரணில் போட்டியிடும் பட்சத்தில் பாரம்பரியமாக ஐ.தே.க. பெற்றுவந்த சிங்கள வாக்குகளுடன் தமிழ், முஸ்லிம், சிங்கள கிறிஸ்தவர்களின் வாக்குகளையும் ஐ.தே.க. இம்முறை எதிர்பார்த்திருந்தது. ஐரோப்பாவில் புலித்தடை நீக்கத்துக்கு எதிராக நாடாளுமன்றத்தில் விசேட தீர்மானம் ஒன்றை ஏகமனதாக நிறைவேற்றி ஐரோப்பிய ஒன்றியத்துக்கு அனுப்பிவைக்கவேண்டும் என்று சஜித் பிரேமதாஸ நேற்றுமுன்தினம் சபாநாகரிடம் கோரிக்கை விடுத்ததன்மூலம் ஐ.தே.கவும் ஏனைய தென்னிலங்கைக் கட்சிகளும் ஒன்று என்பது மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சுதந்திரத்தின் பின் பதவிக்கு வந்த அரசுகளின் இனவாத நடவடிக்கைகள் அடக்குமுறைகள் காரணமாக தமிழ் மக்கள் புலிகளை ஆதரித்தது உண்மைதான். ஆனால், பயங்கரவாத நடவடிக்கைகளையோ, பிரிவினையையோ தமிழ் மக்கள் ஆதரிக்க வில்லை. அதேசமயம், பதவிக்கு வந்த அரசு, புலிகளைச் சாட்டி தம் மீது மேற்கொண்ட நெருக்குவாரங்களை அவர்கள் எதிர்த்தனர். அரசு தற்போது ஜனாதிபதித் தேர்தலைக் கருத்திற்கொண்டு மீண்டும் புலிப் பீதி காட்டுவது அப்பாவித் தமிழ் மக்களுக்கே பாதகமாக உள்ளது.

ஓமந்தை ஊடாக வட பகுதி செல்லும் வெளிநாட்டவர்கள் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெற வேண்டும் என்ற உத்தரவால் பாதிக்கப்பட்டுள்ளோரில் பெரும்பாலானோர் தமிழ் மக்களாகவே இருக்கப் போகிறார்கள். சுற்றிவளைப்புகளும் இனி இடம்பெறலாம்.

2009 மே மாதம் புலிகள் முற்றாக அழிக்கப்பட்ட பின்பும் அரசு புலிகள் பற்றி அடிக்கடி பீதி கிளப்பி வருகிறது. இதன் உள்நோக்கம் புலிகளைக் காரணம் காட்டி தமிழ் மக்கள் மீதான அடக்குமுறைகளைத் தொடருவதற்குத்தான். ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றத்தின் புலித்தடைக்கு எதிராக இலங்கை நாடாளுமன்றம் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்று கோரிக்கை விடுத்ததன் மூலம் ஐ.தே.கவும் தமிழர் மீதான அடக்குமுறைகளுக்கு தானும் துணைப் போவதைப் பகிரங்கப்படுத்தியுள்ளது. எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.கவுக்கு தமிழ் - முஸ்லிம் வாக்குகள் கிடைக்கக்கூடாது என்பது ஜனாதிபதி மஹிந்தவின் குறிக்கோள். இதற்கு உதவியுள்ளார் சஜித் பிரேமதாஸ. தமிழ் மக்களைப் பொறுத்த வரை இருகட்சிகளுமே ஒன்று என்பதை ஐ.தே.க. மற்றொரு தடவை வெளிப்படுத்தியுள்ளது.

# நிறைவேற்று அதிகாரம் நாட்டுக்குத் தேவையா?

சேரலாதன்





நிறைவேற்ற அதிகாரங்களைக் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறை ஒழிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை அண்மைக்காலமாக நாட்டில் பலமாக ஒலிக்கத் தொடங்கிவிட்டன. எதிர்க்கட்சியினர் மட்டுமல்ல ஆளும் தரப்பில் உள்ளவர்களும் இதில் இணைந்துள்ளனர். மூன்றாவது தடவையாகவும் ஜனாதிபதி வேட்பாளர் நானே என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ள நிலையில் இந்தக் கோரிக்கை எழுந்துள்ளது. பொதுவாக நோக்கும்போது நாட்டிலுள்ள பெரும்பாலானவர்கள் ஜனாதிபதி ஆட்சி முறை இந்த நாட்டுக்கு உகந்ததல்லவென எண்ணுவதாகவே தெரிகின்றது. தனி நபர் ஒருவரிடம் சகல அதிகாரங்களும் குவிந்திருப்பதும், அவர் ஒரு சர்வாதிகாரி போன்று செயற்படுவதும் நாட்டின் ஜனநாயக விழுமியங்களைச் சிதைத்து விடுமென்பதை இப்போதாவது பலரும் உணர்ந்து கொண்டுள்ளமை மாற்றமொன்றுக்கான அறிகுறியென்றே கருத முடியும்.

### ஜே.ஆர்.விதைத்த விதை

மறைந்த முன்னாள் ஜனாதிபதியும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக இருந்தவருமான ஜே.ஆர்.ஜெயவர்த்தனா 1977 ஆம் ஆண்டு இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் கிடைத்த அதிபெரும்பான்மை வெற்றியைத் தமக்குச் சார்பாக மாற்றிக் காட்டினார். நரித் தந்திரங்கள் நிறைந்த அவரது மூளையில் உதித்ததுதான் இந்த நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறை. ஜே.ஆரை எதிர்ப்பதற்கு அன்று எவருக்குமே துணிவு இல்லாததால் அவரது கட்சியினர் இதனை ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறு வழியிருக்கவில்லை. அன்று ஜே.ஆர். விதைத்த விதையை இன்று முழு நாடுமே அறுவடை செய்து வருகின்றது.

இந்த நிலையில் தற்போதைய ஜனாதிபதியான மஹிந்த ராஜபக்ஷ ஜே.ஆருக்கு ஒரு படி மேலே சென்று தாம் மூன்றாவது தடவையாகவும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு ஏதுவாக அரசியலமைப்பில் உரிய திருத்தங்களை மேற்கொண்டதுடன் அதற்கான ஆயத்த வேலைகளிலும் ஈடுபட்டு வருகின்றார். ஆனால் இடம்பெறப்போகும் ஜனாதிபதித் தேர்தல் மஹிந்தரைப் பொறுத்த வரையில் இலகுவாக அமைந்துவிடப் போவதில்லை என்பதை கள நிலைவரங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

### ஆளும் தரப்பினரும் விரும்பவில்லை

ஆளும் தரப்பிலுள்ள ஒரு தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும், ஒரு சில அமைச்சர்களும் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறுவதற்கு இன்னமும் சுமார் இரண்டு வருடங்கள் உள்ள நிலையில் அதற்கு முன்பதாக தேர்தல் இடம்பெறுவதை விரும்பவில்லை. மேலும் நிறைவேற்று அதிகாரம், குடும்ப ஆட்சி என்பவற்றால் இவர்கள் சலிப்படைந்த நிலையிலும் காணப்படுகின்றனர். நாட்டின் மொத்த வருமானத்தில் பெருந்தொகையை ஜனாதிபதியும், அவரது குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் கையாள்வதாக குற்றச்சாட்டுக்கள் கிளம்பியுள்ள நிலையில் அதில் உண்மையும் இல்லாமலில்லை. நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதி பதியும், பொருளாதார அமைச் சர் என்ற வகையில் அவரது சகோதரரான பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுமே நிதி யின் பெரும் பகுதியைக் கையாண்டு வருகின்றனர். நாட்டின் மிகப்பெரிய அபிவிருத்தித் திட்டங்கள் இவர்களின் பொறுப்பிலேயே உள்ளன. மேலும், பல்வேறு துறைகளிலும் ஜனாதிபதியின் குடும்பத்தினர் முக்கிய பொறுப்புக்களில் அமர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. ஊவா மாகாணசபைத் தேர்தலின்போது ஆளும் கூட்டணிக்குக் கிடைத்த வீழ்ச்சி காரணமாக அரசுக்குள் இருக்கும் அதிருப்தியாளர்கள் துணிவு பெற்றுள்ளதுடன் அரசுக்கு எதிரான விமர்சனங்களையும் முன்வைத்து வருகின்றனர்.

### சுதந்திரமான ஆணைக்குழுக்கள்

மேலும், சுதந்திரமான ஆணைக்குழுக்கள் அமைக்கப்படாததன் காரணமாக தேர்தல் திணைக்களம் உட்பட நீதித்துறை, பொலிஸ் துறை, இலஞ்ச ஊழல் தடுப்புப் பிரிவு உட்படப் பல திணைக்களங்கள் சுதந்திரமாகவும், நீதியாகவும் இயங்க முடியாததொரு நிலை இந்த நாட்டின் சாபக்கேடாகவே மாறிவிட்டது. அரசியலமைப்பில் திருத்தங் களை மேற்கொள்வதன் மூலமாக சுதந்திரமான ஆணைக் குழுக்களை அமைக்க வேண்டுமென தொடர்ச்சியான கோரிக்கைகள் விடுக்கப்பட்டபோதிலும் அரசு இதற்குச் செவிசாய்ப்பதாகவே தெரியவில்லை.

இந்தியாவில் தேர்தல் ஆணையகம் ஒன்று அமைக்கப்பட்டு தேர்தல் ஆணையாளருக்குப் போதிய அதிகாரங்களும் வழங்கப்பட்டுள்ளதால் அங்கு தேர்தல்கள் நியாயமான வகையில் இடம்பெறுகின்றன. மேலும், தேர்தல்களின் போது மத்திய, மாநில அரசுகளின் குறுக்கீடுகளும் இடம் பெறுவதற்கான சாத்தியங்கள் அரிதாகவே காணப்படுகின்றன. ஆனால் எமது நாட்டைப் பொறுத்தவரையில் தேர்தல்கள் ஆணையாளர் அரசின் விருப்பங்களை நிறைவேற்றி வைக்கும் ஒரு முகவராகவே செயற்படுகின்றார். ஊவா மாகாணசபைத் தேர்தலின் போது அரச வளங்கள் பெருமளவில் துஷ்பிரயோகம் செய்யப்பட்டபோதிலும் தேர்தல்கள் ஆணையாளரால் கைகளைக் கட்டிக்கொண்டு வெறுமனே வேடிக்கை பார்க்கவே முடிந்துள்ளது. அங்கு தேர்தல்கள் நியாயமான வகையில் இடம்பெற்றிருக்குமாயின் தேர்தல் முடிவுகளில் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கலாம்.

### அரைவாசிப் பேர் அமைச்சர்கள்

இன்று அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களில் அரைவாசிப்பேருக்கு மேற்பட்டவர்கள் ஏதோவொரு வகையில் அமைச்சர்களாக உள்ளனர். நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களின் வரப்பிரசாதங்களுக்காக பெரும் நிதி செலவிடப்படுகின்றது. ஆனால் அதிகாரங்கள் யாவும் ஜனாதிபதியிடம் குவிந்துள்ளதால் செயல்திறனில்லாத சம்பிரதாய பூர்வமானதொரு அமைப்பாகவே நாடாளுமன்றம் காணப்படுகின்றது. மேலும், ஜனாதிபதியின் விருப்பங்களை நிறைவேற்றும் ஓர் இடமாகவும் நாடாளுமன்றம் செயற்படுகின்றமை நாட்டின் ஜனநாயகத்துக்குப் பறிக்கப்பட்ட குழியென்று கூடக் கூறலாம். வெறும் எண்ணிக்கையின் அடிப்படையில் நாடாளு மன்றத் தீர்மானங்கள் நிறைவேற்றப்படுவதால் நீதியையும், நியாயத்தையும் நிலைநாட்டக்கூடிய சந்தர்ப்பங்களும் இல்லாதொழிக்கப்பட்டுள்ளன. முன்னாள் உயர் நீதிமன்ற பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க விடயத்தில் நாடாளுமன்றம் நடந்து கொண்டதை இதற்கு உதாரணமாகக் கூற முடியும்.

ஜே.ஆரை எதிர்ப்பதற்கு அன்று எவருக்குமே துணிவு இல்லாததால் அவரது கட்சியினருக்கு இதனை ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறு வழியிருக்கவில்லை. அன்று ஜே. ஆர். விதைத்த விதையை இன்று முழு நாடுமே அறுவடை செய்து வருகின்றது.

### ஜாதிக ஹெல உறுமயவின் உறுமல்

இந்த நிலையில் அரசின் பங்காளிக்கட்சியான ஜாதிக ஹெல உறுமய ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்கள் ஒழிக்கப்பட வேண்டும் என்பதில் தீவிர ஆர்வம் காட்டி வருகிறது. அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தச் சட்டமாக இதனைக் கொண்டு வந்திருக்கும் அந்தக் கட்சி இது நிறைவேற்றப்படாது போகுமானால் அரசும், ஜனாதிபதியும் பெரிய எதிர்விளைவுகளைச் சந்திக்க நேரிடுமென எச்சரிக்கையும் விடுத்துள்ளது. அரசுடன் இணைந்திருக்கும் இடதுசாரிக் கட்சித் தலைவர்களும் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களை ஒழிக்குமாறு ஏற்கனவே கடும் அழுத்தங்களைக் கொடுத்து வருகின்றனர்.

ஆனால் ஜனாதிபதியோ இந்த விடயத்தைத் திசை திருப்பும் வகையில் பெரும்பான்மையின மக்கள் மத்தியில் எதையெதையோ பேசி வருகின்றார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழீழக் கோரிக்கையைக் கைவிட்டால் தாம் நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பதாக அவர் கூறியமை எவருக்குமே புரியவில்லை. போர் வெற்றி வலுவிழந்த நிலையில் இப்போது புதுக்கதையொன்றை விடுத்து ஜனாதிபதி ஆதரவு தேடப் பார்க்கின்றார்.

# மாற்றங்கள் நிறைந்த தீபாவளிப் பண்டிகை

ராஜராஜன்



தீபாவளியைக் கொண்டாடும் சிலர் வெடிகளைக் கொளுத்தி எறிவதைக் கண்ட முதியவர்கள் ஆச்சரியத்தால் புருவங்களை உயர்த்துவதைக் காண முடிகின்றது. முன்னரெல்லாம் தைப்பொங்கல் பண்டிகையை மட்டுமே வெடி கொளுத்திக் கொண்டாடும் வழக்கம் காணப்பட்டது. ஆனால் இன்றோ அனைத்துக் கொண்டாட்டங்களிலும் வெடிகள் மூக்கை நுழைத்து விட்டன.

இதுதான் முதியவர்கள் புருவங்களை உயர்த்திப் பார்ப்பதற்கான பிரதான காரணமாகும்.

அன்று தைப்பொங்கல் தினத்துக்குச் சில தினங்களுக்கு முன்பதாகவே தென்பகுதியைச் சேர்ந்தவர்கள் வெடி பொருள்கள் நிறைந்த வாகனங்களுடன் யாழ்ப்பாணத்துக்கு வந்து விடுவார்கள். வெடிகள் பல்வேறு வடிவங்களையுடைய பெட்டிகளில் நேர்த்தியாக அடுக்கி வைக்கப்பட்டிருப்பதே ஒரு தனி அழகு தான். வெடிகளை விட ஈர்க்கு வாணங்கள், பூவிசுறுகள், மத்தாப்பு ஆகிய ரகங்களும் அங்கு காணப்படும். வருடத்தில் ஒரு முறை மட்டுமே வருகின்ற பண்டிகை என்பதால் அநேகமாகப் பண்டிகையைக் கொண்டாடுகின்ற அனைவருமே வெடிகளைக் கொளுத்தி மகிழ்வார்கள். தைப்பொங்கல் பண்டிகைக் கொண்டாட்டம் என்றாலே வெடிகள் முக்கிய பங்கு வகித்ததை அன்று காண முடிந்தது.




அநேகமாக பொங்கலுக்கு முதல் நாள் இரவே வெடிகளின் ஓசை காதைப் பிளக்க ஆரம்பித்துவிடும். இந்த ஓசையை விடிய விடியக் கேட்க முடியும். பொங்கல் தினத்தன்று சொல்லவே தேவையில்லை. அதிலும் பொங்கல் பானை பொங்கி வழியும்போது வெடியோசைகள் உச்சக்கட்டத்தை எட்டிவிடும். மீண்டும் அடுத்த வருடம் பொங்கல் பண்டிகை கொண்டாடப்படும் போது தான் வெடிகளுக்கு மரியாதை கிடைக்கும்.

ஆனால் இன்றோ எடுத்ததற்கெல்லாம் வெடிகளைக் கொளுத்தும் வழக்கம் வந்துவிட்டது. தீபாவளிப் பண்டிகையை வெடிகளைக் கொளுத்திக் கொண்டாடும் வழக்கம் இந்தியாவில் தான் இருந்து வருகின்றது. அங்கே புது ஆடைகள், பலகாரங்கள் கிடைக்குதோ இல்லையோ வெடி நிச்சயமாக முக்கியமானதொரு இடத்தை வகிக்கும்.

தீபாவளி என்றதுமே பழைய நினைவுகள் மனதில் அலைமோத ஆரம்பித்து விட்டன. அன்று தீபாவளி என்றதுமே அநேகமானவர்களின் நினைவில் மதுப்போத்தல்களும், இறைச்சி போன்ற மாமிச வகைகளும் வந்துவிடும். ஏனென்றால் புது ஆடைகளுக்கு நிகராக இந்த இரண்டும் அன்று முக்கிய பங்கை வகித்தன. தலையில் வழிய வழிய எண்ணெய் பூசிக் கொண்டு மது மயக்கத்தில் திரிவது அன்று வழக்கமாகவே இருந்தது. அதிகரித்த மது பாவனை காரணமாக மோதல்களும் ஏற்பட்டன. இதனால் தீபாவளி தினத்தன்று வீட்டைவிட்டு வெளியே கிளம்பாதவர்களும் அன்று காணப்பட்டனர். ஆனால் இன்று இந்தக் கொண்டாட்டத்தில் மாற்றங்கள் வந்துள்ளன. கௌரி விரதத்தை அடுத்து கந்தசஷ்டி விரதம் ஆரம்பிப்பதால் அன்றைய தினம் புலால் உணவுகளை உண்பவர்களின் தொகை வெகுவாகக் குறைந்து விட்டது. அத்துடன் தீபாவளி தினத்தைப் பொறுத்தவரையில் மது பாவனையும் குறைந்து விட்டது என்று தான் கூறவேண்டும். ஆனால் அதற்குப் பதிலாக வெடியோசைகள் கேட்க ஆரம்பித்துவிட்டன.

இந்த ஆண்டு தீபாவளி வேறொரு வகையில் சிறப்புப் பெறுகின்றது. கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான ரயில்சேவை ஆரம்பிக்கப்பட்டதுதான் அது. துடிப்புள்ள இளைஞர்கள் சிலர் ரயிலில் கொழும்புக்குச் சென்று தீபாவளிக்குரிய ஆடைகளைக் கொள்வனவு செய்துவிட்டுத் திரும்பியுள்ளதாக வெளிவந்த தகவல்கள் கேட்பதற்குச் சுவையாக இருக்கின்றது. இனிமேல் புகையிரதத் திணைக்களத்தின் காட்டில் பணமழைக்குக் குறைவிருக்காது. எம்மவர்கள் பிரயாணம் என்ற போர்வையின் கீழ் பணத்தை அள்ளி அள்ளி வழங்கப் போகின்றனர். பாவம் கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் போக்குவரத்தில் ஈடுபட்ட பஸ் உரிமையாளர்கள்தான் நொடித்துப் போகும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

தீபாவளிக்கு முதலே ஆரம்பித்த பருவ மழை இம்முறை தொடர்ந்து பெய்ததால் வியாபாரிகள் தலையில் கைவைக்கும் நிலை உருவாகியிருந்தது. வருணபகவான் இவர்களின் நிலைகண்டு இரக்கப்பட்டோ என்னவோ முதல்நாள் மதியத்துக்கு முன்பதாகவே சற்று ஓய்ந்து உதவி செய்தார். இதனால் பிற்பகல் வேளையில் வியாபாரம் வழமையை விட இரண்டு மடங்கு சூடுபிடித்துக் காணப்பட்டது. அதிலும் ஏகப்பட்ட வாகனங்களுடன் வந்து இங்கு முகாமிட்ட தென்னிலங்கை வியாபாரிகள் தாம் கொண்டுவந்த பொருள்களை இங்குள்ளவர்களின் தலைகளில் சுமத்தி விடுவதில் குறியாகச் செயற்பட்டனர். இங்குள்ளவர்களும் பொருள்களின் தரத்தை ஆராய்ந்து பார்க்காது மலிவு என்ற ஒன்றையே குறியாகக் கொண்டு அவற்றை வாங்குவதில் ஆர்வத்துடன் ஈடுபட்டிருந்தனர். ஆனால் இங்கு பெரும் முதலீடு செய்து வர்த்தகத்தில் ஈடுபட்டுவரும் வர்த்தகர்களின் நிலைதான் பரிதாபகரமான கட்டத்தை எட்டிவிட்டது.



நரகாசுரன் என்ற கொடிய அரக்கனைக் கொன்றதனைக் கொண்டாடும் வகையில் தீபாவளித் திருநாள் அமைந்துள்ளதாகக் கூறுவார்கள். ஆனால் எம் மத்தியில் அழித்து ஒழிக்கப்பட வேண்டிய புதிய அரக்கன் ஒருவனும் தோன்றி மக்களை அச்சமூட்டி வருகின்றான். அவனை வாள் என்று அழைக்கின்றனர். முன்னரெல்லாம் அரசர்களின் கரங்களில் வீற்றிருந்து பகைவர்களின் அங்கங்களை வெட்டிச் சாய்த்த இந்த வீரவாள்கள் இன்று கொலைகாரர்கள், கொள்ளையர்கள், திருடர்கள், சமூக விரோதிகள் ஆகியோரின் கைகளில் தவழ்ந்து தனது மதிப்பை இழந்து விட்டன. ஆனால் இவற்றைத் தயாரித்து வழங்குபவர்களை காவல் துறையினர் இன்னமும் கண்டு பிடிக்காதமை தான் வியப்பை அளிக்கின்றது.

எது இருந்த போதிலும் பண்டிகைகள் மக்களின் மனதிலுள்ள துயரங்களையும், கவலைகளையும் போக்கி அவர்களைப் புது மனிதர்களாக மாற்றி விடுவதாகக் கூறுவார்கள். இதில் உண்மை இல்லாமல் இல்லை. இதைப் போன்று தான் இந்த ஆண்டு தீபாவளிப் பெருநாளைக் கொண்டாடும் அனைவரும் அடுத்த ஆண்டை நம்பிக்கையுடன் ஏதோவொரு வகையில் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றார்கள். அவர்களது நம்பிக்கையே தொடர்ந்து வாழ்வதற்கான உந்து சக்தியை வழங்குகின்றது.

எம்மவர்கள் பல்வேறு வகையில் பலராலும் வஞ்சிக்கப்பட்ட நிலையில் வாழ்கின்றனர். இவர்களது மனங்களில் நம்பிக்கையீனங்கள் நிறைந்து காணப்படுகின்றபோதிலும் இதயத்தின் ஏதோவொரு மூலையில் நம்பிக்கையின் ஒளிக்கீற்றொன்றும் தென்படுகின்றது. அதுவே பெரிதாகி இவர்களை வாழ்விக்குமென நம்புவோமாக.

---

**வாசகர் திருமுகம்**

## கவனிக்க வேண்டிய இரண்டு விடயங்கள்

சுன்னாகம் ஐயனார் ஆலயம் மற்றும் அதற்கு அருகிலுள்ள பிள்ளையார் ஆலயம் ஆகியனவற்றுக்குக் கிழக்குத் திசையில் அமைந்துள்ள வீதியின் ஓரங்களில் பெருமளவு பாத்தீனியச் செடிகள் வளர்ந்து காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது. வயல் நிலங்களுக்கு அருகிலேயே இந்தச் செடிகள் காணப்படுவதால் எதிர்காலத்தில் இந்தச் செடிகளிலிருந்து பரவும் விதைகள் மூலமாக அதிகளவு செடிகள் தோன்றக்கூடிய அபாயமும் ஏற்பட்டுள்ளது. எனவே ஆலயங்களின் சுற்றாடலில் வசிப்பவர்கள் இந்தப் பாத்தீனியச் செடிகளை அழிப்பதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.


மழை காலம் தற்போது ஆரம்பித்துள்ளதால் பாத்தீனியச் செடிகள் அதிகளவில் பரவுவதற்குச் சாதகமானதொரு நிலை ஏற்பட்டுள்ளதையும் கவனத்தில் கொள்ளல் வேண்டும். மேலும் ஐயனார் ஆலயத்துக்கு முன்புறமாகச் செல்லும் வீதியின் ஒருபகுதி மோசமாகச் சேதமடைந்துள்ளதால் இதில் பயணிக்கும் பொதுமக்களும், வாகனங்களும் சிரமங்களை எதிர்கொள்வதைக் காண முடிகின்றது. சைக்கிள்களிலும், மோட்டார் சைக்கிள்களிலும் செல்பவர்கள் வீதியின் மோசமான நிலை காரணமாக வீதிக்கு அருகிலுள்ள காணியூடாகப் பயணிப்பதையும் காண முடிகின்றது. ஆகவே இந்த வீதியும் உடனடியாகப் புனரமைக்கப்படல் வேண்டும்.

சி. யசிந்தன், சுன்னாகம்.

## ஏனிந்த அநியாயம்?

பழைய காலத்தில் மருந்துகள் கொடுக்கும்போது தெய்வத்தை நினைத்தவாறே கொடுப்பார்கள். ஏனென்றால் நோயாளி சுகமாக வேண்டுமென்பது அவர்களின் விருப்பமாக இருந்தது. அவர்கள் அதிக இலாபம் வைக்க மாட்டார்கள். காரணம் மருந்துகளில் அதிக இலாபம் வைத்தால் சந்ததி விலாச மற்று படிப்படியாக நோய்களின் இருப்பிடமாக மாறிவிடும். இப்போது மருந்துக் கடைகளில் தாம் நினைத்தபடி விலை நிர்ணயம் செய்து கொடுத்து விடுவார்கள். திரு நெல்வேலியில் ஒரு விலை, கொக்குவிலில் ஒரு விலை, யாழ்ப்பாணத்தில் ஒரு விலை, சுன்னாகத்தில் ஒரு விலை, அங்கே வேலை செய்கின்ற பிள்ளைகளுக்கும் சம்பளம் கொடுப்பது நோயாளிகளின் பணத்தில் தான். திருநெல்வேலிக்கும் கொக்குவிலுக்கும் இடையில் ஒரு மருந்துக்கு ஐம்பது ரூபா வித்தியாசம். எத்தனை மருந்துகள் இவ்வாறு அதிக இலாபம் வைத்து விற்பனை செய்யப்படுகின்றன. மக்களை வதைத்து ஒவ்வொரு வர்த்த கரும் சுரண்டிக் கொண்டே இருக்கிறார்கள். இவர்களை ஆண்டவன் சும்மா விடமாட்டான் அறாவிலைக்கு விற்ற எவராவது நல்லாயிருந்ததாகச் சரித்திரம் இதுவரை இல்லை.

பரமசிவம்பிள்ளை



## காதலில் தோல்வி

நாணயம், ரேகா ஐ.பி.எஸ், அரசி, சொந்தபந்தம், துளசி, பிரிவோம் சந்திப்போம் தொடர்களில் நடித்தவர் சபர்ணா. தற்போது புதுக் கவிதையில் தினேசுடன் நடித்து வருகிறார். சபர்ணாவுக்கு வீட்டில் மாப்பிள்ளை பார்த்து வருகிறார்கள். விரைவில் திருமணம் செய்து கொள்ள இருக்கிறார்.

இது பற்றி அவர் கூறியிருப்பதாவது, நான் கோயம்புத்தூரைச் சேர்ந்தவள். பட்டப்படிப்பு முடிந்ததுமே ஊடகம்தான் என்னுடைய தெரிவாக இருந்தது. சென்னைக்கு வந்தேன். இசைத் தொலைக்காட்சி அலைவரிசையில் வேலை பார்த்தேன். நிகழ்ச்சிக்கு வந்த சினிமா பிரபலங்கள் நடிக்க கூப்பிட்டாங்க. படிக்காதவன், பிரிவோம் சந்திப்போம், காளை உள்பட சில படங்களில் நடிச்சேன். பின்னர் சின்னத்திரை வாய்ப்பு வந்தது. சினிமாவை விட சின்னத்திரை சிறப்பாகத் தெரிந்தது.




நடிக்க ஆரம்பித்தேன். அதன் பின்னர் வந்த சினிமா வாய்ப்புகளை தவிர்த்துட்டேன். இந்த நடிப்பு வாழ்க்கையில் எனக்கும் காதல் வந்தது. நானும் காதலித்தேன். ஆனால் என்னுடைய தெரிவு தவறாகி விட்டது. காதலில் இருந்து நானும் வெளியில் வந்து விட்டேன். இனி அப்பா அம்மா தெரிவுதான். அவர்கள் யாரை கை காட்டுகிறார்களோ, அவரைத் திருமணம் செய்வதற்கு தயாராக இருக்கின்றேன்.

## கணக்கு


பாடசாலைக் காலத்தில், கணித பாடத்தை பிடிக்காதவர்கள்தான் அதிகம். அதே போல் கணித பரீட்சையில் தோல்வி அடைபவர்கள்தான் அதிகம். இந்தப் பிரச்சினை உலகம் முழுவதிலும் உள்ள மாணவர்களுக்கும் பொருந்தும்.

இந்த நிலையில் இங்கிலாந்தைச் சேர்ந்த 19 வயது மாணவன், கணித பாடத்தால் தான் படிக்கும் வகுப்பில் மூன்று வருடங்கள் தோல்வியடைந்து ஒரே வகுப்பில் இருந்தார். இதனால் அவருக்கு மிகவும் அவமானமாக இருந்ததாம். தனக்கு கணிதத்தில் உள்ள சூத்திரங்கள் ஒன்றுமாக விளங்கவில்லை. இந்தப் பிரச்சனையைப் போக்குவதற்காக கணித பாடத்தில் உள்ள சூத்திரத்தை உடலில் பச்சை குத்த முடிவு செய்தார்.

தனது பின்பக்கத்தில் மிகவும் முக்கியமான கணித சூத்திரத்தைப் பச்சை குத்தியுள்ள அவர், கண்டிப்பாக இந்த வருடம் சித்தியடைந்து விடுவேன், என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார். அவருடைய வித்தியாசமான முயற்சியை கண்டு மாணவர்களும், ஆசிரியர்களும் அவரை கேலி செய்து வருகின்றனர்.



## அசத்திய ரஜினி



ஒரே நாளில் லிங்கா படத்தின் டப்பிங்கை பேசி முடித்து அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளார் நடிகர் ரஜினிகாந்த். கோச்சடையான் படத்திற்கு பிறகு நடிகர் ரஜினி இரட்டை வேடத்தில் நடித்து வரும் படம் லிங்கா. கே.எஸ்.ரவிக்குமார் இயக்கும் இப்படத்தில், ரஜினி ஜோடியாக அனுஷ்கா, சோனாக்ஷிஸ்ரீ சின்ஹா நடிக்கின்றனர். ஏ.ஆர். ரஹ்மான் இசையமைக்கிறார். இன்னும் ஒரு பாடல் மட்டுமே படப்பிடிப்பு செய்ய வேண்டி உள்ளது.

இந்த நிலையில் தற்போது டப்பிங் பணிகள் நடக்கின்றன. இதில் படத்தில் தான் பேச வேண்டிய அனைத்து டப்பிங்கை ஒரேநாளில் பேசி முடித்து அனைவரையும் ஆச்சரியப்படுத்திவிட்டார் ரஜினி. லிங்கா படம் ரஜினி பிறந்தநாள் அன்று அல்லது பொங்கலுக்கு வெளியாகும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.

## ரிலாக்ஸா வாசியுங்க



பையனுக்கு என்ன பெயர் வைச்சிருக்கிறீங்க ?
'லோராண்டி' என்று வைத்திருக்கின்றேன் !
என்னய்யா பெயர் இது. கேள்விப்பட்டதே இல்லையே..?
என்ன இப்படிச் சொல்லிட்டீங்க, சித்தர் பாடல்களில் இடம் பெற்ற பெயர் இது!
அது என்ன பாடல்?
நந்தவனத்தி 'லோராண்டி'..!

## சிக்கிக் கொண்ட தலை

சீனாவில் குழந்தை ஒன்று தனது மாடிக் குடியிருப்பு வீட்டின் ஜன்னல் வழியாக இறங்க முயற்சி செய்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. சீனாவின் தலைநகர் பீஜிங்கில் மாடிக் குடியிருப்பின் 15 ஆவது மாடியில் குடும்பம் ஒன்று 5 வயது சிறுமியுடன் வசித்து வருகின்றது.

சம்பவத்தன்று சிறுமியை விட்டிலேயே தனியாக விட்டுவிட்டுப் பெற்றோர் வெளியே சென்றுள்ளனர். அப்போது தனியாக இருந்த சிறுமி வெளியே செல்ல ஜன்னல் வழியாக இறங்கியுள்ளார். சிறுமியின் உடல் பகுதி ஜன்னலுக்கு வெளியே வந்த நிலையில் அவரது தலை மட்டும் ஜன்னல் கம்பிகளுக்கு இடையே சிக்கி கொண்டுள்ளது. இதனால் தொங்கிய நிலையில் சிறுமி செய்வதறியாது திகைத்துள்ளார். இதனை பார்த்த சிலர் மீட்புப் படையினருக்கு தகவல் கொடுத்துள்ளனர். இதனையடுத்துச் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்ற மீட்புப் படையினர் தொங்கி கொண்டிருந்த சிறுமியைப் பத்திரமாகக் காப்பாற்றியுள்ளனர்.





## சாயி சிந்தனை

**மனிதன் முடிவில் அடைய விரும்பும் விழுமியம் யாது?**

ஈற்றில் மனிதன் அடைய விரும்பும் விழுமியம் தெய்வீக வாழ்வு ஆகும். மனி தன் முக்குணங்களுக்கும் அப்பால் சென்று தெய்வீகத்தை அடைய வழி தேடிக் கொள்ள வேண்டும்.

## பறக்கும் மனிதன்


இங்கிலாந்து வான் பரப்பில், வானில் பறந்து கொண்டிருந்த மனிதனை விமானப் பயணிகள் அவதானித்துள்ளனர். இந்தச் சம்பவம் இரண்டு தினங்களுக்கு முன்னர் நடைபெற்றுள்ளது. இங்கிலாந்தில் உள்ள மான்செஸ்டர் நகரில் இருந்து ஏர்பஸ் 320 விமானம் புறப்பட்டது. அந்த விமானம் சுமார் 200 முதல் 300 அடி உயரத்தில் பறந்தபோது விமானத்தின் இடது பக்கத்தில் ஒரு மனிதன் பறந்து செல்வது போன்ற காட்சியை கண்டு விமானப்பயணிகளும், விமானியும் திடுக்கிட்டனர். பரசூட் மூலம் குதித்து சாகசம் செய்யும் வீரர்கள் அந்த பகுதியில் பறக்க வாய்ப்பே இல்லை என்ற நிலையில் அந்த பறக்கும் மனிதன் பெரும் மர்மமாக [illegible]டான். ரேடரின் பார்வையில் இருந்தும் தப்பியுள்ள அந்த பறக்கும் மனிதன் ஒரு சில வினாடிகளில் அவர்களுடைய பார்வையில் இருந்து மறைந்துவிட்டதாகவும் கூறப்படுகிறது. அந்த பறக்கும் மனிதனை 100 மீற்றர் தொலைவில்தான் பார்த்ததாகவும், பூமியில் வாழும் மனிதனைபோல்தான் இருந்ததாகவும் விமானப்பயணி ஒருவர் கூறியுள்ளார்.

# தி ஹார்பூன் ஏவுகணையை சோதனைசெய்த தைவான்

நீர்மூழ்கிக் கப்பலில் இருந்து செலுத்தக்கூடிய தி ஹார்பூன் ஏவுகணையை தைவான் கடற்படையினர் கடந்த திங்கட் கிழமை சோதித்தனர். அமெரிக்காவில் இருந்து தருவிக்கப்பட்ட



ஆயுதங்களைத் தற்போது முதன்முதலாக சோதிப்பதாக தைவான் ஊடகங்கள் தெரிவித்தன. நீர்மூழ்கிக் கப்பல்கள் இரண்டில் ஆயுதங்களை நிரப்பும் நோக்கில் தைவானிய கப்பற்படை இரண்டு ஏவுகணைகளை கடந்த ஆண்டு அமெரிக்காவிடமிருந்து வாங்கியது. பரிசோதிக்கப்பட்ட ஏவுகணைகள் 278 கிலோமீற்றர் தொலைவு வரை பாயக்கூடிய திறன் வாய்ந்தவை. இந்தப் புதிய ஏவுகணைகள் ஏற்கெனவே இருந்தவற்றைக் காட்டிலும் அதிக திறன்வாய்ந்தவை. இது குறித்து தைவானின் தற்காப்பு அமைச்சு கருத்துக்கூற மறுத்து விட்டது. தைவான், சுதந்திர நாடாகத் தன்னைப் பிரகடனப் படுத்திக்கொண்டால் அதைத் தனது ஒரு பகுதியாகக் கருதிக் கொண்டிருக்கும் சீனா, தைவான் மீது படை எடுக்கக்கூடும் என்ற அச்சமே அது அமெரிக்காவிடமிருந்து ஆயுதங்களை வாங்கிக் குவிப்பதற்குக் காரணமாக இருக்கும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (வ)



அரபு நாடான யேமனில் கடந்த மாதம் தலைநகர் சானாவை ஹவ்தி பிரிவினர் கைப்பற்றியதை அடுத்து தொடர்ந்து அங்கு வன்முறைச் சம்பவங்கள் அரங்கேறி வருகின்றன. இந்த நிலையில் திங்கட்கிழமை அல் பெய்டா மாகாணத்தில் உள்ள ரத்தா நகரில் மனித வெடிகுண்டுப்படை தீவிரவாதியொருவர் வெடி குண்டுகள் நிரப்பிய காரில் சென்று உள்ளூர் அதிகாரி ஒருவரது வீட்டின் மீது மோதினார். இதன்போது 13 பேரும் அன்றையதினம் அங்கு அடுத்தடுத்து இடம்பெற்ற தொடர் தாக்குதல்களில் 20 பேரும் என 33 பேர் உயிரிழந்தனர். (வ)

# ஐ.எஸ்.ஐ.எஸ்ஸை அழிப்பதற்கு உதவுக

## அமெரிக்கா வேண்டுகோள்

வொஷிங்டன், ஒக்.23
ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாத அமைப்பை அழிப்பதற்கு ஆசிய நாடுகள் உதவ வேண்டும் என்று அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஜோன் கெர்ரி வேண்டுகோள் விடுத்துள்ளார்.
ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாத அமைப்புக்கு எதிராக ஆதரவு திரட்டுவதற்காகவும், எபோலா வைரஸை கட்டுப்படுத்த ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுப்பதற்காகவும் இந்தோனேசியா தலைநகர் ஜகார்த்தாவுக்கு அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஜோன் கெர்ரிநேற்று முன்தினம் சென்றார்.
அந்தநாட்டுத் தலைவர்களைச் சந்தித்த கெர்ரி, ஆஸ்திரேலியா, மலேசியா, புருனே, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர் ஆகிய நாடுகளைச் சேர்ந்த அதிகாரிகளையும் சந்திக்கவுள்ளார்.
இதுகுறித்து அமெரிக்க அதிகாரிகள் கூறுகையில், ஐ.எஸ். அமைப்பு சார்பில் போரிட வெளிநாடுகளில் இருந்து முஸ்லிம்கள் செல்கின்றனர். அவர்களைத் தடுத்து நிறுத்தும் முயற்சியாக இந்தச் சுற்றுப் பயணத்தை நாங்கள் மேற்கொண்டுள்ளோம்.
ஐ.எஸ். அமைப்புக்கு எதிரானநடவடிக்கைகளில்இந்தோனேசியா உள்ளிட்ட ஆசிய நாடுகள் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று நாம் விரும்புகிறோம்.
ஐ.எஸ். அமைப்புக்கு நிதி திரட்டுவது, அவர்களுக்கு ஆதரவான பரப்புரையை முன்னெடுப்பது போன்ற செயல்களில் ஈடுபடுவோரை இந்த நாடுகள் தடுக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளனர். (வ)

## வட கொரியாவுக்கு கடும் எச்சரிக்கை

எல்லைப் பகுதிகளில் அத்து மீறல்கள் தொடரும் பட்சத்தில் கடுமையான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்று வட கொரியாவுக்கு தென் கொரியா எச்சரிக்கை விடுத்துள்ளது.
வட கொரியா- தென் கொரியா நாடுகளுக்கு இடையே நீண்ட காலமாகவே எல்லைப் பிரச்சினை இருந்து வருகிறது. அவ்வப்போது இரு நாட்டு இராணுவத்தினருக்குமிடையே தாக்குதல்கள் நடைபெறுவது உண்டு.
சமீபத்தில் சர்ச்சைக்குரிய கடல் எல்லைப் பகுதியில் இரு நாட்டுகடற்படைக் கப்பல்களும் சிறிய அளவில் தாக்குதல் நடத்தின, இதனால் எல்லைப் பகுதிகளில் பதற்றமான சூழ்நிலை நிலவுகிறது.
அதனைத் தொடர்ந்து கடந்த சில நாள்களாக எல்லைப் பகுதியில் வட கொரிய இராணுவ வீரர்கள் அத்துமீறி தாக்குதல் நடத்தி வருகின்றனர்.
இவ்வாறான தாக்குதல்கள் தொடரும் பட்சத்தில் கடுமையான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்று தென் கொரிய எச்சரிக்கை விடுத்துள்ளது.
இதுகுறித்து தென் கொரியா இராணுவ செய்தித் தொடர்பாளர் கிம்மின் சியோக் கூறுகையில், "வட கொரியா அத்துமீறலில் ஈடுபடுவதை உடனடியாக நிறுத்த வேண்டும். இதற்கு மேலும், எங்களால் பொறுமையாக இருக்க முடியாது. இனியும், அத்து மீறலில் ஈடுபட்டால் தேவை யற்ற சூழல் உருவாகி விடும்" என்று தெரிவித்துள்ளார். (வ)



# பரீட்சை எழுதினால் தூக்குத் தண்டனை

## மிரட்டும் ஐ.எஸ்.ஐ.எஸ்.

பக்தாத், ஒக்.23
ஈராக்கில் மாணவர்களை பரீட்சை எழுதச் செல்ல விடாமல் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் மிரட்டி வருகின்றனர்.
ஈராக் மற்றும் சிரியாவின் பகுதிகளைக் கைப்பற்றியுள்ள ஐஎஸ்ஐஎஸ் தீவிரவாதிகள் தனி இஸ்லாமிய நாட்டை உருவாக்கியுள்ளனர்.
ஈராக்கின் மிகப்பெரிய நகரமான மொசூலை கைப்பற்றியுள்ள தீவிரவாதிகள், அங்குள்ள மக்களை இஸ்லாமிய கொள்கைகளை பின்பற்றுமாறு வலியுறுத்தி வருகின்றனர்.
மீறுபவர்களுக்கு கொடூரமான தண்டனைகள் வழங்கப்படுகிறது. மேலும் மாணவர்களுக்கும் இஸ்லாமிய கொள்கைகள் தழுவிய மறுசீரமைப்பு பாடத் திட்டத்தை ஏற்படுத்த முயற்சித்து வருகின்றனர்.
இந்தநிலையில் 6-18 வயதுக்கு உட்பட்ட ஆயிரக் கணக்கான மாணவர்களை பரீட்சை எழுதச்செல்ல விடாமல் தடுத்து வருகின்றனர்.
இந்த விதியை மீறும் பட்சத்தில், தூக்குத் தண்டனை நிச்சயம் என்று ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பினர் எச்சரித்துள்ளனர்.
இதுகுறித்து மாணவர் மைசூன் முஹம்மது கூறுகையில், "ஐ.எஸ்.ஐ.எஸ் எங்களது கனவை நாசமாக்கி விட்டது, ஏற்கனவே நாம் தாக்குதலுக்கு மத்தியில் பாடம் படித்து மன உளைச்சலில் உள்ளோம். எங்களது பாடசாலைப் பருவம் வீணாகிப் போனதுடன், இனிமேலும் படிக்க முடியும் என்ற நம்பிக்கையும் அற்றுப் போயுள்ளது என்கிறார். (வ)

# செவ்வாயைக் கடந்தது ராட்சத வால் நட்சத்திரம்



விண்வெளியில் சி2013 ஏ என்ற ராட்சதவால் நட்சத்திரம் செவ்வாய்க்கிரகத்தை தாண்டிச் சென்றுள்ளது.
சைடிங் ஸ்பிரிங் என்ற பெயர் கொண்ட இந்த வால் நட்சத்திரம், ஒரு சிறிய மலை அளவு பருமன் கொண்டது. இந்த வால்நட்சத்திரம் திங்கட்கிழமை மாலை 2.27 மணிக்கு செவ்வாய்க் கிரகத்தைக் கடந்து சென்றது.
அப்போது அது மணிக்கு 2 லட்சத்து 3 ஆயிரம் கிலோ மீற்றர் அதிவேகத்தில் கடந்தது. அது செவ்வாய்க்கிரகத்தில் இருந்து ஒரு லட்சத்து 39 ஆயிரத்து 500 கிலோ மீற்றர் தூரத்தில் பாய்ந்து சென்றது.
இது பூமி மற்றும் சந்திரனுக்கு இடையேயான தூரத்தின் 3 மடங்காகும். செவ்வாய்க் கிரகத்தைக் கடந்து சென்ற போது இந்த வால் நட்சத்திரம் பவுடர் போன்ற புகையையும், பல இடிபாட்டுத் துகள்களையும்வெளியேற்றியது. அமெரிக்காவின் நாசா செவ்வாய்க் கிரகத்தை ஆய்வு செய்ய மார்ஸ் ஒடிசி, மாவென் உள்ளிட்ட3விண்கலங்களை அனுப்பியுள்ளது.
இந்த வால் நட்சத்திரம் செவ்வாய்க்கிரகத்தைக் கடப்பதால் இந்த விண்கலங்கள் மீது மோதி அவை சேதமடையும் என்று கருதப்பட்டது. ஆனால் அவை செவ்வாய்க்கிரகத்தின் பின்புறத்தில் பாதுகாப்பாகச் சுற்றிப் பறந்ததால் அதன் தாக்குதலில் இருந்து தப்பின.
செவ்வாய்க்கிரகத்தை இந்த வால் நட்சத்திரம் 10 லட்சம் ஆண்டுக்கு ஒருமுறை கடக்கும். அந்த நிகழ்வு தற்போது இடம் பெற்றுள்ளது. (வ)


# சீனாவில் 58,789 பேர் 100 வயதைக் கடந்தோர்

பீஜிங், ஒக்.23
சீனாவில் 58,789 பேர் நூறு வயதைத் தாண்டி ஆரோக்கியமாக வாழ்ந்து கொண்டிருப்பதாக அந்த நாட்டில் முதுமை குறித்து ஆய்வு மேற்கொள்ளும் அமைப்பு தெரிவித்துள்ளது.
இதில் 128 வயதுடைய நபர் ஒருவரும் வாழ்ந்து வருகிறார். சீனாவில் முதுமை குறித்து பல ஆய்வுகளை மேற்கொண்டுவரும் அமைப்பு இது தொடர்பான



தனது ஆய்வின் முடிவில் தெரிவித்ததாவது, சீனாவில் சுமார் 60,000 பேர்வரை நூறு வயதைத் தாண்டி ஆரோக்கியமாக வாழ்கின்றனர். இதில் பெரும்பாலானோர் கிராமப் பகுதிகளில் வாழ்பவர்கள் ஆவர்.
கணக்கிடப்பட்டுள்ள 58,789 பேரில் பெரும்பான்மையானோர் பெண்களாக உள்ளனர். இவர்கள் அனைவரும் சுற்றுச்சூழல் பாதிப்படையாத வகையில் உள்ள ஹைனான், குவாங்ஸி, அனியூய் ஆகிய மாகாணங்களைச் சேர்ந்தவர்களாக உள்ளனர் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
மேலும், 100 வயதைக் கடந்த முதியவர்கள் அனைவரும் தற்போதைய நிலையிலும் வீட்டு வேலைகளை மட்டுமல்லாது வெளிப்புற வேலைகளையும் கவனித்து, ஆரோக்கியமான உணவுப் பழக்கத்தை கையாளுகின்றனர் என்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (வ)





# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**: குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். பிரபலங்களின் நட்புக் கிட்டும். தொட்டது துலங்கும் நாள். பணியாளர்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவர்.

**இடபம்**: எதிர்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். அயல் வீட்டாரின் ஆதரவு அதிகரிக்கும். வேற்று மதத்தவர்கள் நண்பர்களாவார்கள். புதுமை படைக்கும் நாள். குடும்பத்தில் சிற்சில சண்டைகள் வரலாம்.

**மிதுனம்**: எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். தாய்வழி உறவினர்களுடன் மனஸ்தாபம் வந்து நீங்கும். வியாபாரத்தில் அதிரடிச் சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள். உழைப்பால் உயரும் நாள்.

**கடகம்**: உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். பிள்ளைகளால் புகழ், கௌரவம் உயரும். வீட்டு விசேடங்களை முன்னின்று நடத்துவீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**சிங்கம்**: சோர்வு நீங்கி துடிப்புடன் செயற்படத் தொடங்குவீர்கள். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். புதிய யோசனைகள் பிறக்கும். பழைய பிரச்சினைகள் தீரும். வியாபாரத்தில் புதிய தொடர்பு கிடைக்கும்.

**கன்னி**: சுலபமாக முடிக்க வேண்டிய சில காரியங்களை பெரும் போராட்டத்துக்குப் பின்னர் முடிக்க வேண்டி வரும். மற்றவர்களை முழுமையாக நம்பிக்கொண்டிருக்க வேண்டாம். கோபத்தால் இழப்புகள் ஏற்படும்.

**துலாம்**: எவரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். முக்கிய கோப்புகளைக் கையாளும்போது அலட்சியம் வேண்டாம். சகோதர வகையில் பிணக்குகள் வரும். வியாபாரத்தில் வேலையாள்கள் அதிருப்தி அடைவார்கள்.

**விருச்சிகம்**: குடும்பத்தினருடன் மனம் விட்டுப் பேசி மகிழ்வீர்கள். நெருங்கியவர்களைச் சந்தித்து எதிர்காலம் குறித்து ஆலோசிப்பீர்கள். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களால் ஆதாயம் உண்டு.

**தனுசு**: உங்களின் அணுகுமுறையை மற்றவர்களின் ரசனைக்கேற்ப மாற்றிக் கொள்வீர்கள். பழைய உறவினர், நண்பர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள். வியாபாரம் செழிக்கும். முயற்சியால் முன்னேறும் நாள்.

**மகரம்**: உங்கள் செயலில் வேகம் கூடும். சபைகளில் மதிக்கப்படுவீர்கள். சிலர் உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். வியாபாரத்தில் சில தந்திரங்களைக் கற்றுக் கொள்வீர்கள்.

**கும்பம்**: கடந்த காலத்தை நினைத்து அவ்வப்போது கொஞ்சம் பதற்றமடைவீர்கள். நல்ல வாய்ப்புகளையெல்லாம் பயன்படுத்தாமல் விட்டுவிட்டோமே என்றெல்லாம் வருத்தப்படுவீர்கள். நாவடக்கம் தேவைப்படும் நாள்.

**மீனம்**: உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். புதியவர்கள் நண்பர்களாவார்கள். வெளியூர் பயணங்களால் புத்துணர்ச்சி பெறுவீர்கள். திறமைகள் வெளிப்படும் நாள். குடும்பத்தில் சந்தோசம் நிலவும். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர்.

## நாளை

**ஐப்பசி-07 வெள்ளிக்கிழமை | 24.10.2014**

திதி: பிரதமை
பி.இ.04.11 வரை
நட்சத்திரம்: சுவாதி
பி.இ.05.58 வரை

சுபநேரம்:06.02-07.32 வரை
இராகுகாலம்:10.32-12.02 வரை
**ஸ்கந்தசஷ்டி விரதாரம்பம்**

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## துன்பமற்ற வாழ்வு

நல்லவனாக இரு என்று திரும்பத் திரும்ப உலகெங்கும் போதிக்கப்படுவதைக் கேட்கிறோம். திருடாதே, பொய் சொல்லாதே என்று அறிவுறுத்தப்படாத ஒரு குழந்தைகூட உலகின் எந்த நாட்டிலும் இருக்க முடியாது. ஆனால் அப்படிச் செய்யாமல் இருப்பது எப்படி என்பதை யாரும் அவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பதில்லை. வெறும் வாய்ப் பேச்சினால் எந்தப் பயனுமில்லை. அவன் ஏன் திருடனாகக் கூடாது திருடாமல் இருப்பது எப்படி என்று அவனுக்கு நாம் கற்றுக் கொடுப்பதில்லை. திருடாதே என்று மட்டும் அவனிடம் வெறுமனே சொல்கிறோம். மனத்தை அடக்கியாளக் கற்றுக் கொடுக்கும்போதுதான் உண்மையில் அவனுக்கு உதவுகிறோம். பொறிகள் எனப்படுகின்ற சில குறிப்பிட்ட மையங்களுடன் மனம் தன்னை இணைத்துக் கொள்ளும் போது தான் அக மற்றும் புறச் செயல்கள் எல்லாமே நிகழ்கின்றன. மனம் உடன்பட்டாலும் சரி உடன்படாவிட்டாலும் சரி, இந்த மையங்களுடன் இணைவதற்காக இழுக்கப்படுகிறது. இதனால் தான் மனிதன் முட்டாள்த்தனமாக காரியங்களைச் செய்து விட்டு, பின்னால் துன்பப்படுகிறான். மனம் மட்டும் அவன் வசம் இருந்திருந்தால் அவற்றை அவன் செய்திருக்கவே மாட்டான். மனத்தை அடக்குவதால் ஏற்படும் பலன் என்ன? அது பொறிகளோடு சேர்ந்து கொள்ளாது. அதனால் எண்ணங்களும் செயல்களும் இயல்பாகவே கட்டுப்பாட்டில் இருக்கும். இன்று அதை நீங்கள் காணவும் செய்கிறீர்கள், துன்பம், கவலை, தீமை என்பவை இல்லையென்று மறுத்து விடும்படி நம்பிக்கை வைத்தியர்கள் மக்களுக்குக் கற்பிக்கின்றனர். அவர்களின் வழி சற்று சுற்று வழிதான். ஆனால் தங்களுக்குத் தெரியாமல் அவர்கள் எப்படியோ யோக நெறியின் ஒரு பகுதியையே பயன்படுத்துகின்றனர். ஒருவனது துன்பத்தை மறுப்பதன் மூலம் அவனது துன்பத்தை நீக்குவதில் வெற்றி காண்கின்றனர்.

# இழந்த பார்வையை மீட்டுத்தரும் ஸ்டெம் செல்கள்



பார்வையை இழந்தவர்களுக்கு கரு முட்டையிலுள்ள ஸ்டெம் செல்களைப் பயன்படுத்தி மீண்டும் பார்வையை ஏற்படுத்த முடியும் என்று அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். எனினும் வயதின் மூப்பு அடிப்படையில் கண் பார்வையை இழக்கும் நோயாளிகளுக்கு மட்டுமே இந்தமுறை வெற்றியளிக்கும் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான பார்வைக் குறைபாடு உடைய 18 பேரை வைத்து மேற்கொண்ட ஆய்வின் மூலம் இந்த முடிவு கிடைக்கப் பெற்றுள்ளது. அவர்களுக்கு மனித கருமுட்டையிலுள்ள ஸ்டெம்ஸ் செல்களை மாற்றீடு செய்ததன் மூலம் படிப்படியாக பார்வையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக விஞ்ஞானிகள் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2 | 7 | 9 | 8 | | | | 4 |
| | | | | 2 | 4 | | 6 | 9 |
| | 4 | 6 | 7 | | | | | |
| 4 | 9 | | | | | 6 | | 8 |
| | 5 | | | | | | 4 | |
| 6 | | 3 | | | | | 1 | 2 |
| | | | | | 3 | 4 | 2 | |
| 5 | 3 | | 2 | 9 | | | | |
| 8 | | | | 5 | 7 | 1 | 9 | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 5 | 6 | 4 | 9 | 2 | 1 | 8 | 7 |
| 9 | 4 | 7 | 1 | 8 | 6 | 5 | 3 | 2 |
| 8 | 2 | 1 | 7 | 5 | 3 | 4 | 6 | 9 |
| 1 | 3 | 9 | 5 | 7 | 4 | 8 | 2 | 6 |
| 2 | 7 | 4 | 9 | 6 | 8 | 3 | 5 | 1 |
| 6 | 8 | 5 | 3 | 2 | 1 | 7 | 9 | 4 |
| 4 | 1 | 8 | 6 | 3 | 9 | 2 | 7 | 5 |
| 7 | 9 | 3 | 2 | 1 | 5 | 6 | 4 | 8 |
| 5 | 6 | 2 | 8 | 4 | 7 | 9 | 1 | 3 |

# சென். பற்றிக்ஸ் புல் தரை ஆடுகளத்தை இலங்கை கிரிக்கெட் உபதலைவர் பார்வை



யாழ்ப்பாணம், ஒக் 23

யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள புல் தரையிலான கிரிக்கெட் விளையாட்டு மைதானத்தை நேற்றுப் புதன் கிழமை பகல் இலங்கை கிரிக்கெட்டின் உப தலைவர் லயன் மொகான் டி சில்வா மற்றும் மாவட்டங்கள், மாகாணங்களின் இணைப்பாளர் சித்தார்த் பெர்ணான்டோ ஆகியோர் நேரில் பார்வையிட்டனர்.

யாழ் மாவட்டத்தில் முதல் தடவையாகப் புல் தரையிலான கிரிக்கெட் மைதானம் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரிமைதானத்தில் இலங்கைக் கிரிக்கெட் அமைப்பின் உதவியுடன் அமைக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட புல் தரையிலான மைதானம் எதிர்வரும் 29 ஆம் திகதி சம்பிரதாய பூர்வமாக திறந்துவைக்கப்படும். அன்று ஒரு கிரிக்கெட் போட்டியும் நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் உப அதிபர் அருட் திரு எஸ். எயின்சிலி றொஷான், கல்லூரி கிரிக்கெட் பயிற்றுநர் நிசாந்தன், மாவட்ட இலங்கை கிரிக்கெட்டின்பயிற்றுநர் லக்சித, யாழ் மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் தலைவர் சந்திரநாதன் ஆகியோரும் கலந்துகொண்டார்கள். இதேவேளை - யாழ் மாவட்டத்தில் கிரிக்கெட் வளர்க்கப்பட வேண்டும். அதன் மூலம் யாழ். மாவட்ட வீரர்களும் தேசிய அணியில் இடம்பெற வேண்டும் என்பதற்காகவே யாழ்ப்பாணத்திலும் புல் தரையிலான கிரிக்கெட் ஆடுகளம் அமைக்கப்பட்டுள்ளதாக இலங்கை கிரிக்கெட்டின் உப தலைவர் மொகான் டி சில்வா தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்;


யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரிமைதானத்தில் அமைக்கப்படும் புற்றரையிலான கிரிக்கெட் ஆடுகளத்திற்கு இலங்கை கிரிக்கெட் அமைப்பினால் 25 லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. இது போன்று யாழ்ப்பாணம் மாவட்ட கிரிக்கெட் அமைப்பிற்கும் கழகங்களின் வளர்ச்சிக்காக 15 லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் எதிர்காலத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்து சிறந்த கிரிக்கெட் வீரர்கள் உருவாக்கப்பட வேண்டும். இனம் காணப்பட வேண்டும். வளர்த்தெடுக்கப்படவேண்டும். தேசிய மட்டத்தில் அவர்களுடைய பங்களிப்புகளும் இடம்பெற வேண்டும் - என்றார். (த)

## யாழ். வீரன் ஞானரூபன் பங்களாதேஷ் பயணம்

இலங்கைத் தேசிய உதைபந்தாட்ட அணியினர் பங்களாதேஷுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளனர். இதில் யாழ்.பல்கலைக்கழக உதைபந்தாட்ட அணியின் பிரபல வீரரும், இளவாலை யங் ஹென்றிஸ் அணியின் வீரருமான எஸ்.என்.ஞானரூபனும் இடம்பெற்றுள்ளார்.

பங்களாதேஷ் அணிக்கு இடையிலான இரண்டு சர்வதேச உதைபந்தாட்டப் போட்டிகள் இடம்பெறவுள்ள நிலையிலேயே நேற்று இலங்கை உதைபந்தாட்ட அணியினர் டாக்காவைச் சென்றடைந்துள்ளனர்.

இலங்கை தேசிய உதைபந்தாட்ட அணியில் எரந்த பிரசாத், சரித்த ரத்நாய்க்க, தரிந்து லக்மால், அசிக்குமார் ரஹ்மான், ஹசான் சந்ரத்ன, மொகமட் ரிப்னாஸ், திருன சேனநாயக்க, ஸர்வான் ஜேகார், சுஜான் பெரேரா, மொகமட் இம்ரான், சுபாஸ் மதுசன், சஜித் குமார, சத்துரங்க சஞ்சீவன்(தலைவர்), நாளக ரொசான், எம்.ரிஸ்கான், மதுசான் சில்வா, கவிந்து இசான், டசுன் பரணவிதான, எஸ்.என். ஞானரூபன், தரிந்து எரங்க, சுந்தர பண்டார, சானக்க விஜயசேகர, எம்.பஸால் ஆகிய வீரர்கள் இடம்பெற்றுள்ளனர்.(த)



## பிராவோவுக்கு நெருக்கடி

இந்திய தொடரை பாதியிலேயே கைவிட நேர்ந்ததற்கு அணித் தலை வர் பிராவோ தான் காரணம் என்று மேற்கு இந்தியத்தீவுகள் கிரிக்கெட் சபை கூறியுள்ளது.

ஐந்து ஒரு நாள் போட்டிகள், ஒரு 20/20 மற்றும் டெஸ்ட் தொடரில் பங்கேற்பதற்காக இந்தியா வந்திருந்த மேற்கு இந்தியத் தீவுகள் அணியில், வீரர்களின் சம்பளம் தொடர்பாக பிரச்சினை வெடித்தது. இதன் காரணமாக முதல் போட்டியிலேயே மேற்கு இந்தியத் தீவுகள் வீரர்கள் விளையாட முடியாது என்று பிடிவாதம் பிடித்தனர். பின்னர் அவர்களைச் சபை சமாதானப்படுத்தியது.

இதைத் தொடர்ந்து அவர்கள் 2 போட்டிகளில் விளையாடினர். இந்நிலையில் மீண்டும் பிரச்சினை பெரிதாக வெடிக்க 4ஆவது போட்டியோடு அணி நாடு திரும்பும் என சபை அறிவித்தது. இதனால் 5ஆவது போட்டியும், மற்றப் போட்டிகளும் கேள்விக் குறியாகின.

இந்த நிலையில், மேற்கு இந்தியத் தீவுகள் கிரிக்கெட் சபை ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

இந்தியத் தொடர் பாதியிலேயே முடிந்து போனதற்காக மேற்கு இந்தியத் தீவுகள் அணியின் வீரர்கள், இந்திய கிரிக்கெட் ரசிகர் கள், இந்திய கிரிக்கெட் சபை, அனுசரணையாளர்களிடம் மன் னிப்பு கேட்டுக் கொள்கிறோம். இது மிகவும் வருத்தமான சூழ லாகும்.

அணித் தலைவர் பிராவோதான் இந்தக் குழப்பங்களுக்குக் காரணம் என்பதை நாங்கள் சொல்லியாக வேண்டும். குறிப்பாக மேற்கு இந்தியத் தீவுகள் வீரர்கள் சங்கத் தலைவர் வேவல் ஹிண்ட்ஸ் மீது அவர் தேவையில்லாமல் விமர்சனம் செய்துள்ளார் என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (த)

## தோல்வியில் இருந்து பாடம் கற்ற சச்சின், சனத் ஜயசூரிய



எதிரணியுடனான மோதலின்போது தோல்விப் பயணத்தில் 9 வீரர்கள் 200க்கும் அதிகமாகத் தோல்வி பெற்ற அணியில் இருந்துள்ளனர். அந்த வகையில் பல சாதனைகளை குவித்த இந்திய அணியின் முன்னாள் ஜாம்பவான் சச்சின் இடம் பெற்ற அணியானது 256 முறை தோல்வியைத் தழுவியுள்ளது.

இந்தத் தோல்வி தான் எனக்குப் பல விடயங்களைக் கற்றுக் கொடுத்தது எனக் கேரளா உதைபந்துக் கழக நிகழ்ச்சி ஒன்றில் சச்சின் கூறியுள்ளார்.

இவருக்கு அடுத்ததாக இலங்கை அணியின் முன்னாள் வீரர் சனத் ஜயசூரிய அணி 240 முறை தோல்வியைத் தழுவியது. 3ஆவது இடமாக ஜயவர்த்தன இடம் பெற்ற அணி 236 முறை தோல்வியடைந்துள்ளது.

சந்தர்போல் (229), டிராவிட் (215), சங்கக்கார (214), பிரையன் லாரா (207), கெய்ல் (200), அப்ரிடி (200) ஆகியோர் அடுத்தடுத்த இடங்களில் இருக்கின்றனர். (த)

## ஆடுகளங்கள் அறிவிப்பு

இந்தியா, இலங்கை அணிகள் மோதும் 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடருக்கு மைதானங்கள் மற்றும் திகதிகள் அறி விக்கப்பட்டுள்ளன.

மேற்கிந்திய தீவுகள் அணி தொடரை பாதியிலே கைவிட, இலங்கை அணிக்கு இந்திய அணி அழைப்பு விடுத்தது. இந்த அழைப்பை ஏற்ற இலங்கை அணி அடுத்த மாதம் இந்தியாவுடன் 5 ஒருநாள் போட்டிகளில் விளையாடுகிறது. இந்நிலையில் ஐதராபாத்தில் இந்தியக் கிரிக்கெட் சபையின் தெரிவுக் குழுக் கூட்டம் நடைபெற்றது. அதில் ஐந்து போட்டிகள் நடைபெறும் மைதானங்கள் தெரிவு செய்யப்பட்டன.

அதன்படி கட்டாக், ஐதராபாத், ராஞ்சி, கொல்கத்தா மற்றும் அகமதாபாத் ஆகிய நகரங்களில் போட்டிகளை நடத்த முடிவு செய்யப்பட்டது. வரும் நவம்பர் மாதம் 2, 5, 8, 11 மற்றும் 14 ஆகிய திகதிகளில் இப்போட்டிகள் நடைபெறுகின்றன. (த)



# பா.ஜ.கவுடன் பேச்சு நடத்த டில்லி விரைந்தது சிவசேனா

டில்லி, ஒக்.23
சுயேச்சை உறுப்பினர்கள் மற்றும் சிறிய கட்சிகளின் ஆதரவு தங்களுக்கு இருக்கின்றது என்று பா.ஜ.க. அறிவித்துள்ளதையடுத்து சிவசேனா தலைவர்கள் புதுடில்லி விரைந்துள்ளனர்.

மகாராஷ்டிர மாநில தேர்தல் இழுபறி நிலையை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக வெற்றி பெற்ற சுயேச்சை வேட்பாளர்களின் ஆதரவை பா.ஜ.க. கோரியுள்ளதை அடுத்தே சிவசேனாக் கட்சித் தலைவர்கள் புதுடில்லி சென்றுள்ளனர்.

சிவசேனாக் கட்சி, கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனில் தேசாய், மூத்த தலைவர் சுபாஷ் தேசாய் ஆகியோரை பா.ஜ.கவுடன் பேச்சு நடத்துவதற்கு நியமித்துள்ளது. இருப்பினும், தீபாவளி பண்டிகை முடிந்த பிறகே மகாராஷ்டிரத்தில் பா.ஜ.கவுடன் கைகோர்க்கப்போவது யார் என்பது தெரியவரும் என்றும் கூறப்படுகின்றது.

முன்னதாக, சுயேச்சை உறுப்பினர்கள் மற்றும் சிறிய கட்சியினரின் ஆதரவுடன் தங்களது உறுப்பினர்களின் எண்ணிக்கை 138-ஆக உயர்ந்துள்ளது என்று பா.ஜ.க. கூறியிருந்தது. (ற)



## தொடர்ச்சிகள்

### மலசலகூடம்

கழுவுவதற்கென அதற்குரிய பணியாளர்களை வைத்திருக்கவேண்டும் என்று கூறப்படுகின்றது.

இது குறித்த தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது,

700 மாணவர்களுக்குக் குறைந்த பாடசாலைகளுக்கு மலசலகூடத் தொழிலாளர்கள் நியமிக்கப்படுவதில்லை. அதனால் குறித்த பாடசாலைகளில் தவணை முறைப்படி மாணவர்களே அதனைச் செய்கின்றனர். வலயத்தில் கூட அந்தப் பிரச்சினை நிலவுகிறது.

அதற்குரிய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றபோதும் எவரும் அதற்கு வருகிறார்களில்லை. தவிர 700 மாணவர்களுக்குக் குறைந்த பாடசாலைகளின் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க பாடசாலை அபிவிருத்திச் சங்கம் ஊடாகப் பணம் பெற்று ஒருவரை அமர்த்தி அந்தப் பணியைச் செய்தல்வேண்டும். குறித்த வேலணைப் பாடசாலைக்குப் பிரதேச சபை மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் உதவி நாடப்பட்டுள்ளது என்றார். (த-4)

### புலிகள்

இவ்வாறான சூழ்நிலையில் இலங்கை அரசு விடுதலைப் புலிகள் முன்வைக்கும் வாதங்களை எதிர் கொள்வதற்காக ஐரோப்பிய ஆணைக் குழுவுக்கு உதவுவதற்காக சகல விதமான ஆதாரங்களையும் வழங்கி உள்ளது.

நீதிமன்றத் தீர்ப்பைத் தொடர்ந்து, குறிப்பிட்ட தரப்புகள் தீர்ப்புக்கு எதிராக மேற்கொள்ளவுள்ள நடவடிக்கைகளுக்கு ஆதரவாக இலங்கை அரசு ஏற்கனவே செயற்படத் தொடங்கியுள்ளது.

எஞ்சியிருக்கும் விடுதலைப்புலிகள் பொதுமக்களிடம் பலவந்தமாக பணம் பறிப்பதன் மூலமாக அச்சுறுத்துவதை தடுப்பதற்காகவும், விடுதலைப் புலிகள் புத்துயிர் பெறுவதை தவிர்ப்பதற்காகவும் அரசு அதனைச் செய்கின்றது. அரசு இதனை மிகுந்த முன்னுரிமைக்குரிய விடயமாக கருதுகின்றது.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### அலவி மௌலானா

தான் காட்டுகிறது. ஆனால் அன்று நான் முன்வந்து நல்லிணக்கத்தைக் காட்டியதால் தான் இப்போது அரசின் உண்மை முகம் தெரிய வந்துள்ளது. இதை அன்று தன்னை விமர்சித்த பலர் இன்று புரிந்து கொண்டுள்ளதாக விக்னேஸ்வரன் குறிப்பிட்டார்.

மேல் மாகாணத்தில் முதல்வர் பிரசன்ன ரணதுங்க கொண்டுள்ள அதிகாரங்கள் தனக்கு மறுக்கப்பட்டுள்ளதாக விக்னேஸ்வரன் தெரிவித்தார். மாகாணச் செயலாளரை தன்னால் நியமிக்க முடியவில்லை. இங்குள்ள ஆளுநர் அலவி மௌலானா, சம்பிரதாயபூர்வக் கடமைகளைச் செய்கிறார். ஆனால், அங்குள்ள ஆளுநர் சந்திரசிறி, அரசியல் - நிர்வாக முடிவுகளை எடுத்துச் செயற்படுகிறார். இதுதான் வித்தியாசம்.

இதை சிங்கள மக்களுக்கு எடுத்துக் கூறும்படி என்னிடம் கோரிக்கை விடுத்தார். தானும் இதை செய்ய விரும்புவதாகவும், அதற்கு ஒத்துழைப்பு வழங்கும்படியும் கேட்டுக் கொண்டார். வடக்கு மாகாண சபைக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதி மற்றும் முதல்வர் என்ற முறையில் தான் எதிர்கொள்ளும் திட்டமிட்ட தடைகளை, ஜனாதிபதி தேர்தல் தொடர்பான முடிவுகளை எடுக்கும் போது தனது கட்சி கவனத்தில் கொள்ளும் என்றும் அவர் எனக்கு கூறினார் - என்றார். (த-5)

### கல்வி

வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அறிவிக்காமல் முன்பள்ளிகளை மூடிவிட்டு ஆசிரியைகளை கடந்த 20ஆம் திகதி விசுவமடு சிவில் பாதுகாப்புத் திணைக்களத்துக்கு அழைத்து சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் ஆண்டு விழா கொண்டாடப்பட்டுள்ளது. மறுநாளும் எந்தவித அறிவித்தல்களும் இன்றி முன்பள்ளிகளை மூடிப் பாதுகாப்புத் திணைக்களத்தால் கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் ஆசிரியர் தினம் கொண்டாடப்பட்டுள்ளது.

மேற்படி இரு தினங்களும் சிவில் பாதுகாப்புத் திணைக்களம் கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகத்தின் அனுமதியின்றித் தன்னிச்சையாகக் கிளிநொச்சி மாவட்ட முன்பள்ளிகளை மூடியுள்ளது.

மேற்படி முன்பள்ளி ஆசிரியர்களுக்கான ஆசிரியர் தினத்தில் முன்பள்ளி ஆசிரியைகள் 384 பேர் தவிர்ந்த ஏனைய முன்பள்ளி ஆசிரியர்கள் 146 பேருக்கும் அழைப்பு விடுக்கவில்லை எனவும் கூறப்படுகின்றது.

முன் அறிவித்தல் இன்றி முன்பள்ளிகளை இரு நாள்களும் மூடியுள்ளமையால் கிளிநொச்சி மாவட்ட முன்பள்ளிகளுக்குக் கிளிநொச்சி மாவட்ட கால்நடை வளர்ப்போர் சங்கத்தால் வழங்கப்பட்டு வரும் பசுப்பாலும் வீணாகி உள்ளது.

இது குறித்து கால்நடை வளர்ப்போர் சங்கத்தால் வடமாகாண கல்வி அமைச்சரிடமும் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளரிடமும் முறையிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-426)

### ரயில்

பிக்கப்பட்டதையடுத்து யாழ்ப்பாணம், கொடிகாமம் ஆகிய ரயில் நிலையங்களில் மட்டும் முற்பதிவுகள் இடம்பெற்று வருகின்றன.

யாழ்ப்பாணத்துக்கு அடுத்த நிலையில் உள்ள சாவகச்சேரி பெரு நகரமாகத் திகழ்கின்றது. நகரை அண்டிய பகுதியில் 25க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. சாவகச்சேரி நகரை அண்டிய நிலையில் ரயில் நிலையம் அமைந்துள்ளது. இங்குள்ள 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் ரயில் பயண முற்பதிவுக்காகக் கொடிகாமத்துக்குச் செல்லவேண்டியுள்ளது. மக்களின் நலன் கருதி சாவகச்சேரி ரயில் நிலையத்தில் பயணத்துக்கான முற்பதிவுகளை மேற்கொள்ள ரயில்வே திணைக்களப் பொது முகாமையாளரைக் கேட்கவேண்டுமென கோரினார். இதனைச் சபை ஏற்றுக்கொண்டதால் உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென தலைவர் இ.தேவசகாயம் பிள்ளை உறுதியளித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-9)

### பூட்டில்லாத

இவற்றைக்கருத்தில்கொண்டே சுன்னாகம் பொலிஸார் நேற்று அதிரடி நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர். வீதியோரங்களில் பூட்டுகள் இல்லாது நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 24 சைக்கிள்களை அள்ளிச் சென்றனர். பின்னர் அவற்றின் உரிமையாளர்களுக்கு எச்சரிக்கை செய்யப்பட்டு அவை மீள ஒப்படைக்கப்பட்டுள்ளன. (ற-4)

### ஆலயங்களில்

முறையும் எளிமையான முறையில் கொண்டாடினார்கள். பட்டாசுகள் கொளுத்துவது மற்றும் வாண வேடிக்கைகள் விடுவது போன்றவற்றையும் மக்கள் இம்முறை தவிர்த்துக் கொண்டனர்.

இதேவேளை,

யாழ்.முற்றவெளியில் திருடர்கள் கைவரிசை சம்பவங்கள் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மிகத் தாராளமாக இடம்பெற்றன.

இந்தப் பகுதியில் தீபாவளி நடைபாதை வியாபாரிகளின் வியாபார நடவடிக்கைகள் களை கட்டிக் கொண்டிருந்த சமயம் மறு புறத்தில் திருடர்களும் தமது கைங்கரியத்தைக் காட்டியுள்ளனர்.

பொருள்கள் வாங்கச் சென்றவர்களால் பூட்டி விடப்பட்டிருந்த இரண்டு சைக்கிள்களை திருடர்கள் மிகவும் தந்திரமாகக் களவாடிச் சென்றுள்ளனர்.

அதனை விட நடைபாதை வியாபாரிகளிடம் உடுபுடவைகளைப் பார்த்து வாங்குவதாகப் பாசாங்கு செய்து அவற்றை தந்திரமாக எடுத்துச் செல்ல முற்பட்ட பெண்கள் சிலர் சிக்கிக் கொண்டனர். அவர்கள் வியாபாரிகளால் கடுமையாக எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர். (த-17)

### எல்லாளன்

அமைப்பு அறிவித்திருந்தது. அந்தத் தாக்குதலை நடத்தி உயிர்நீத்தவர்களை நினைவு கூரும் நிகழ்வுகளையே புலம் பெயர் தமிழர்கள், பல்வேறு நாடுகளில் நேற்று முன்னெடுத்திருந்தனர். (ற-5)

### இலங்கைக்கு

ருந்தார். அதன்போதே மேற்குறிப்பிட்ட பாதுகாப்பு உடன்பாடுகள் எட்டப்பட்டுள்ளன என்று ரைம்ஸ் 'ஒவ் இந்தியா நாளிதழ்' செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை இராணுவத்துக்கு மேலும் பயிற்சிகளையும் ஆயுத தளபாடங்களையும் வழங்க இந்தியா திட்டமிட்டுள்ளது. இரண்டு கடலோர கண்காணிப்பு படகுகளும், ஆயுத தளபாடங்களும் முதற்கட்டமாக வழங்கப்படவுள்ளன. கடந்த காலங்களில் இந்தியா, 24 எல் வகையைச் சேர்ந்த -70 துப்பாக்கிகள், ரேடார்கள், நிலக்கண்ணி வெடியிலிருந்து பாதுகாப்பளிக்கக்கூடிய வாகனங்கள் போன்றவற்றை வழங்கியிருந்தது. அத்துடன் 800 முதல் 900 இலங்கைப் படையினருக்கு பயிற்சியையும் வழங்கி வருகின்றது. இந்தப் பயிற்சியும் அதிகரிக்கப்படவுள்ளது என்றும் இந்திய பாதுகாப்புத்துறை வட்டாரங்கள் தெரிவித்தன என்று அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு 5 ஆண்டுகள் கடந்த பின்னர் இந்தியா இந்த ஆயுத உதவிகளை வழங்கவுள்ளது. (ற-5)

### பாப்பரசருடைய

மாதத்தில் ஜனாதிபதி தேர்தல் நடைபெறும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளதால் பரிசுத்த பாப்பரசரின் இலங்கைப் பயணம் இடம்பெற வேண்டுமா அல்லது அதனை ரத்துச்செய்ய வேண்டுமா என்பது தொடர்பில் தெளிவுபடுத்தப்பட வேண்டும் என்று கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

ஜனாதிபதிக்கு இவ்வாறான கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளதை உறுதிசெய்துள்ள அவர் அந்தக் கடிதத்தில் இடம்பெற்றுள்ள ஏனைய விடயங்களை பகிரங்கப்படுத்த மறுத்துள்ளார். தேர்தல் காலம் என்பதால் பாப்பரசரின் போக்குவரத்து போன்ற விடயங்கள் குறித்து மல்கம் ரஞ்சித் கவலையடைந்திருக்கிறார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை அவர் இது குறித்து பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய மற்றும் பிரதம நீதியரசர் ஆகியோருடனும் ஆராய்ந்துள்ளார். (ற-5)

### கால

யர் ருவான் வணிக சூரிய.

"எமது இந்தப் பயணக் கட்டுப்பாடு நடைமுறை கடந்த 12 ஆம் திகதி நடைமுறைக்கு வந்ததிலிருந்து இது வரையில் 15 ஆயிரம் பேர் அனுமதிக்காக விண்ணப்பித்துள்ளனர்"- என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு மாகாணத்துக்குள் பிரவேசிக்கும், வெளிநாட்டவர்கள் பாதுகாப்பு அமைச்சின் முன் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று கடந்த 12 ஆம் திகதி பாதுகாப்பு அமைச்சால் கட்டுப்பாடு கொண்டு வரப்பட்டிருந்தது. இந்த நடைமுறை கொண்டு வரப்பட்ட பின்னர், வடக்குக்கு பயணம் மேற்கொண்ட ஐ.நா. முகவர் அமைப்புக்களில் ஒன்றாகிய உலக உணவு ஸ்தாபனத்தின் பிரதிநிதி ஓமந்தையில் வைத்து திருப்பியனுப்பப்பட்டிருந்தார். இது ஏன் என்று இராணுவப் பேச்சாளரிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"வடக்குக்கான பயணக்கட்டுப்பாடு சகல வெளிநாட்டுப் பிரஜைகளுக்கும் பொருந்தும். ஐ.நா. முகவர் அமைப்புக்களின் பிரதிநிதிகள், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் அனைவரும் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அவர்கள் ஒவ்வொரு தடவையும் பயணம் செய்யும் போது அந்த அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டியதில்லை. எவ்வளவு காலத்திற்கு வடக்கில் பணியாற்றப் போகின்றார்கள் என்பதைக் குறிப்பிட்டு அந்தக் காலப் பகுதிக்குரிய அனுமதியைப் பெற்றுக் கொள்ள முடியும்"- என்று இராணுவப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார். (ற-5)

### உள்ளக

ரிருக்கும் என்றும், ஆணைக் குழுவின் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

எதிர்வரும் 2 ஆம் திகதி முதல் 5 ஆம் திகதி வரை முல்லைத்தீவில் நடைபெறவுள்ள மக்கள் அமர்வு முடிவடைந்த பின்னர் அறிக்கை தயாரிக்கும் பணிகள் விரைவுபடுத்தப்பட உள்ளன. இதற் காக சட்டமா அதிபர் திணைக் களத்தின் உதவியும் பெறப்படவுள்ளது.

அதே வேளை காணாமற் போனோர் தொடர்பில் கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகள் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுப்பதற்கு வெளிவிவகார , அமைச்சின் உதவியை நாடியுள்ள ஜனாதிபதி ஆணைக் குழு அவற்றை வெளிவிவகார அமைச்சிடம் 'அண்மையில் ஒப்படைத்திருந்தது. (ற-சி)

### ஜீ.சி.ஈ.

டப்ளியூ.எம்.என்.புஷ்பகுமார தெரிவித்துள்ளார். இந்த முறை பரீட்சைக்கு 577,084 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர் என்றும் பரீட்சை நேர அட்டவணையில் இனி எவ்வித மாற்றமும் செய்யப் படமாட்டாது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-5)

### வாழ்த்துக்

தேறியுள்ளது.


யாழ்.மாவட்டத்தில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர், கடந்த சில வருடங்களுக்கு முன்னர் வீடு வீடாகச் சென்று குடும்பப் பதிவு மேற்கொண்டிருந்தனர். அதற்குக் கடுமையான எதிர்ப்பு கிளம்பியதை அடுத்து அந்த நடைமுறை கைவிடப்பட்டிருந்தது.

இந்நிலையில், தற்போது தீபாவளி வாழ்த்து அட்டை இராணுவத்தினரால் ஒவ்வொரு வீடு வீடாக விநியோகிக்கப்பட்டு வருகின்றது. இராணுவத்தினரின் வாழ்த்தை தாங்கிய அந்த தீபாவளி அட்டையை இராணுவத்தினர் 3 பேர் ஒவ்வொரு வீடு வீடாகச் சென்று விநியோகித்து வருகின்றனர்.

இந்த தீபாவளி அட்டையை வழங்கும் போது வீட்டிலுள்ளவர்களின் விவரங்களைப் பதிவு செய்வதுடன், தொலைபேசி இலக்கங்களையும் பெற்றுச் சென்றுள்ளனர்.

குறித்த தீபாவளி அட்டையில் எதிர்வரும் 25 ஆம் திகதி, இராணுவத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இரவு உணவில் கலந்து கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அன்றைய தினம் இசை நிகழ்வும் இடம்பெறவுள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த சனிக்கிழமை, வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் வீட்டுக்குச் சென்ற இராணுவத்தினர் பதிவுகளை மேற்கொண்டிருந்தனர். குறித்த பதிவுகள் அவரை இராணுவத்தினரின் நிகழ்வுக்கு அழைக்க வேண்டும் என்பதற்காக மேற்கொள்ளப்பட்டது என்று பலாலி இராணுவ ஊடகப் பேச்சாளர் தெரிவித்திருந்தார். (ற-5)





இலங்கையில் புகழ்பெற்ற திருத்தலங்களில் ஒன்றான மன்னார் திருக்கேதீஸ்வரத்தில் நேற்றுக் காலை 7:35 மணியளவில் தீபாவளி திருவிழா வழிபாடுகள் நடைபெற்றன. சிவாச்சாரியார் கருணானந்தா மற்றும் சிவாச்சாரியார் மனோகரராஜா ஆகியோர் இணைந்து குறித்த வழிபாடுகளை நடத்தியிருந் தனர். இதன்போது பக்தர்கள் இறைவழிபாட்டில் ஈடுபட்டதன் மூலம் இறையாசி பெற்றுக்கொண்டனர். (வ)

# 14 போத்தல் கசிப்புடன் மாட்டினார் புதுமுறிப்பு வாசி

புதுமுறிப்புப் பகுதியில் 14 போத்தல் கசிப்புடன் நபரொருவர் ஞாயிற்றுகிழமை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார். அவர் திங்கள்கிழமை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது மது குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து ஒரு இலட்சம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. மேற்படி தண்டத்தை நீதவான் எம்.ஐ.வகாப்தீன் விதித்தார்.

தண்டப்பணம் செலுத்தத் தவறின் 6 மாதகால சிறைத் தண்டனைக்கும் நீதி மன்றம் உத்தரவிட்டிருந்தது. இதேவேளை கண்டாவளைப் பகுதியில் அரைப் போத்தல் கசிப்பை வைத்திருந்த இரு நபர்களுக்கு கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றம் தலா 5 ஆயிரம் ரூபா தண்டம் விதித்துள்ளது. (வ-18)

**மரண அறிவித்தல்**

**இம்மானுவேல் பொன்ராசா**

(ஓய்வுபெற்ற பரந்தன் இரசாயனத் தொழிற்சாலைப் பணியாளர்)



ஏழாலையைப் பிறப்பிடமாகவும், கனகபுரம் கிளிநொச்சியை வதிவிடமாகவும் கொண்ட ஜோர்ச் இம்மானுவேல் பொன்ராசா 21.10.2014 செவ்வாய்க் கிழமை இறைபதமடைந்தார்.

அன்னாரது இறுதி நிகழ்வுகள் இன்று (23.10.2014) வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, கனகபுரம் யூதாததேயு ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு உருத்திரபுரம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.110, 10ஆம் பண்ணை,
கனகபுரம், கிளிநொச்சி.
(47907) (10)
தகவல்: குடும்பத்தினர்.

# ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இந்தியா மீளவும் உறுப்பு நாடானது

2015ஆம்ஆண்டுமுதல்2017ஆம்ஆண்டுவரையான காலப்பகுதிக்கு ஐ.நா. மனித உரிமைகள் சபையின் உறுப் பினராக இந்தியா மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் உள்ள 47 நாடு களில் இந்தியாவும் உறுப்பு நாடாக இருந்த போதும், ஆசியக் க்ண்டத்தைச் சேர்ந்த 4 நாடுகளின் பதவிக் காலம் எதிர்வரும் டிசெம்பர் மாதத் துடன் முடிவடை கின்றது.

அதையடுத்து அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் இந்தியா, பங்களாதேஷ், கட்டார், தாய்லாந்து, இந்தோனேஷியா ஆகிய ஐந்து நாடுகள் போட்டியிட்டன.

அதில் இந்தியா அதிக வாக்குகள்பெற்றுமீண்டும் உறுப்பு நாடாகத் தெரிவு செய்யப் பட்டது. அதேபோன்று தாய் லாந்து தவிர்ந்த ஏனைய நாடுகள் உறுப்பு நாடுகளாகத் தெரிவாகின.

தற்போது தெரிவு செய்யப்பட்ட உறுப்பு நாடுகளின் பதவிக் காலம் 3 ஆண்டுகளில் முடிவடையும் என்று தெரிவிக்கப்பட்டது. (ற)

**மரண அறிவித்தல்**

திருமதி
**வசந்தா சிவசுப்பிரமணியம்**

(புங்குடுதீவு 4ஆம் வட்டாரம்)



புங்குடுதீவு 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பு-15, அளுத்மாவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வசந்தா சிவசுப்பிரமணியம் (17.10.2014) வெள்ளிக்கிழமை கொழும்பில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத் துரை-வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும், சிவசுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும், தவரஞ்சினி, விஜயன், சுகந்தி, கீதா ஆகியோரின் பாசமிகு தாயும் வேல்வேந்தனின் பாசமிகு மாமியும் கேஸ்வினியின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (24.10.2014) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று, பொறளை மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
(53434)(10) தொ.பே: 011 252 4287, 077 871 5204, 077 997 3052

### ஒளிப்பதிவாளர் அசோக்குமார் காலமானார்

பிரபலதிரைப்பட ஒளிப்பதிவாளர் அசோக்குமார் தனது 72ஆவது வயதில் நேற்றுச் சென்னையில்காலமானார். கடந்த சில நாள்களாக உடல் நலக்குறைவால் அவதியுற்று வந்த அசோக்குமார், ஊரப்பாக்கத்தில்உள்ள தனது இல்லத்தில் உயிரிழந்துள்ளார்.

நடிகர் ரஜினிகாந்த் நடித்த ஜானி, கமல் ஹாசன் நடித்த வெற்றிவிழா, பிரசாந்த் நடித்த ஜீன்ஸ் உட்பட பல்வேறு படங் களில் ஒளிப்பதிவாளராக அசோக்குமார் பணியாற்றியுள்ளார். அத்துடன் தெலுங்கு, மலையாளம், இந்தி மற்றும் ஆங்கிலபடங் களிலும் ஒளிப்பதிவாளராகபணியாற்றியுள்ளார்.

நெஞ்சத்தைக் கிள்ளாதே திரைப்படத்தின் ஒளிப்பதிவுக்காகத் தேசிய விருதை அசோக்குமார்பெற்றுள்ளார். மறைந்தஅசோக்குமாருக்கு, மனைவி மற்றும் 4 மகன்மார் உள்ளனர். (ற)

**மரண அறிவித்தல்**

**தவராசா கண்ணதாசன்**



பாலையடி, புலோலி தெற்கு, புலோலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன் தவராசா கண்ணதாசன் 21.10.2014 செவ்வாய்க் கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசரத்தினம் தவராசா மற்றும் நிர்மலாதேவி தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், ஜீவிதா, தாட்சாயினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (23.10.2014) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 1.30 மணியளவில் சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாலையடி, புலோலி தெற்கு,
புலோலி.
(C17205) (10)
தகவல்: குடும்பத்தினர்.

**ஷஷ்டியப்த பூர்த்தி சாந்தி (மணிவிழா)**

**வேத சிவாகம ஜோதிட சிகாமணி**
**சிவ ஸ்ரீ நாகேந்திர பால சுப்பிரமணியக் குருக்கள்**
**கௌரீஸ்வரி தம்பதிகள்**
**ஐப்பசி 08ஆம் நாள் 25.10.2014**



பேரன்புடையீர்!

ஸ்வஸ்ஸ்ரீ நிகழும் மங்களகரமான ஜயவருடம் ஐப்பசி 08ஆம் நாள் (25.10.2014) சனிக்கிழமை விசாக நட்சத்திரம் சுக்கிலபட்ச துதியை திதியும் சித்த யோகமும் கூடிய சுபதினத்தில் நண்பகல் 12.00 மணிக்கு தெய்வேந்திர சுபமூகூர்த்தத்தில் சிவ ஸ்ரீ நாககேந்திர பாலசுப்பிரமணியக் குருக்கள் கௌரீஸ்வரி தம்பதிகளுக்கு கந்தர்மடம் செட்டியந்தாழ்வு ஸ்ரீ ஞான வைரவர் ஆலய மண்டபத்தில் ஷஷ்டியப்த பூர்த்தி சாந்தி வைபவமும் மாங்கல்ய தாரணமும் கொண்டலடி விநாயகப் பெருமான் திருவருளும் நயினை சுவாமி நாத பரமேஸ்வர சிவாச்சாரியார் குருவருளுடனும் சிறப்பாக நடைபெறவுள்ளதால் அன்றைய தினமும் அதற்கு முதல் இரண்டு நாள்கள் நடைபெறும் சாந்திகளிலும் கலந்து சிறப்பித்து பெரியோர்கள் தங்கள் ஆசிகளை வழங்கியும் சிறியோர்கள் தம்பதியரின் ஆசியினைப் பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கிரியாகால நிகழ்வுகள்

ஐப்பசி 06ஆம் நாள் 23.10.2014 வியாழக்கிழமை காலை 7.00 மணிக்கு நாந்தி சிரார்த்தம் மாலை 4.00 மணிக்கு ஏகாதச ருத்ரகும்ப பூசை, ஹோமங்கள்.

ஐப்பசி 07ஆம் நாள் 24.10.2014 வெள்ளிக்கிழமை காலை 7.30 மணிக்கு ஏகாதச ருத்ரகும்ப அபிஷேகம் மாலை 5.00 மணி முதல் ஷஷ்டியப்த சாந்தி கும்ப பூசைகள், வேத பாராயணங்கள், ஜபங்கள், ஹோமங்கள், சுமங்கலிபூசை, சுபாசினி பூசை.

ஐப்பசி 08ஆம் நாள் 25.10.2014 சனிக்கிழமை காலை 8.00 மணிமுதல் ஷஷ்டியப்த பூர்த்தி சாந்திகள் கும்ப அபிஷேகம் தானங்கள் நண்பகல் 12.00 மணிக்கு மாங்கல்யதாரணம், ஆசீர்வாதம், சமாராதனை.

தங்கள் நல்வரவை நாடும்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

48, 2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 1125, 021 500 8964

**மரண அறிவித்தல்**

**கனகரத்தினம் சேனாதிராசா**



சுதுமலையைப் பிறப்பிடமாகவும் இருபாலை கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம் சேனாதிராசா நேற்று (22.10.2014) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரத்தினம்-இராசம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும், சந்திரலீலாவின் அன்புக் கணவரும் சே.மதனகோபி (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், கோப்பாய் மத்தி), கார்த்திகா, சர்மிளா, சிந்துஜா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆனார்.

அன்னாரின இறுதிக்கிரியைகள் இன்று (23.10.2014) வியாழக்கிழமை பி.ப ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இருபாலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

T.P: 0778449170 (53432) (10) தகவல்: குடும்பத்தினர்.

# கல்முனை மாநகர சபையில் இன்று கரையோர மாவட்டப் பிரேரணை

அம்பாறை.ஒக்.23

அம்பாறை மாவட்டத்தில் தமிழ் பேசும் மக்கள் செறிந்து வாழும் கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில் ஆகிய மூன்று தொகுதிகளையும் உள்ளடக்கிய கரையோர மாவட்டத்தை அரசு தாமதமின்றிப் பிரகடனப்படுத்த முன்வர வேண்டுமெனக் கோரும் பிரேரணை ஒன்று இன்று கல்முனை மாநகர சபையின் மாதாந்த அமர்வில் முன் வைக்கப்படவிருக்கின்றது.

கல்முனை மாநகர சபையின் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினரும், முஸ்லிம்காங்கிரஸின் சிரேஷ்ட பிரதித் தலைவருமான ஏ.எல்.அப்துல் மஜீத் இன்று நடைபெறும் மாநகர சபை மாதாந்த அமர்வில் மேற்படி கோரிக்கைப் பிரேரணையை முன் வைப்பதற்கான முன்னறிவித்தலைக் கொடுத்துள்ளதுடன், அது நிகழ்ச்சி நிரலிலும் சேர்க்கப்பட்டுள்ளது.

கல்முனை மாநகர சபையின் மாதாந்த அமர்வு, மாநகர முதல்வர் சட்டத்தரணி எம்.நிஸாம் காரியப்பர் தலைமையில் மாநகர சபை சபா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதன்போதே அம்பாறை மாவட்டதமிழ்பேசும்மக்களின் நலன் கருதி குறித்த தமிழ் பேசும் மக்கள் வாழும் மூன்று தொகுதிகளையும் உள்ளடக்கியதான கரையோர மாவட்டத்தை ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் பிரகடனப்படுத்துமாறு அரசையும், ஜனாதிபதியையும் கோரும் பிரேரணையை உறுப்பினர் அப்துல் மஜீத் முன் வைக்கவுள்ளார்.

சபை அமர்வில் இதற்கான தீர்மானமும் நிறைவேற்றப்படவுள்ளது.

தம்மால் முன் வைக்கப்படும் மேற்படி கரையோர மாவட்டக் கோரிக்கை தொடர்பாக மாநகர சபை உறுப்பினரும், முஸ்லிம் காங்கிரஸின் சிரேஷ்ட பிரதித் தலைவருமான ஏ.எல். அப்துல் மஜீத் கருத்து வெளியிடுகையில்,

கரையோர மாவட்டக் கோரிக்கையென்பது அம்பாறை மாவட்டத்தில் வாழும் தமிழ் மக்களுக்கும், முஸ்லிம் மக்களுக்கும் பெரும் நன்மை பயக்கும் விடயமாகும்.

தனிப்பட இந்த மாவட்டம் முஸ்லிம்களுக்கு மட்டும் நன்மை பயக்கும் நோக்கம் கொண்டதல்ல. தற்சமயம் அம்பாறையை மையமாகக் கொண்டு அம்பாறை மாவட்ட நிர்வாகம் செயற்படுவதால் பல்வேறு நிர்வாக ரீதியான பிரச்சினைகளையும், மொழிப் பிரச்சினை பாகுபாடு போன்ற பிரச்சினைகளையும்தமிழ்முஸ்லிம்மக்கள் அனுபவித்து வருவதுடன், பெரும்பான்மையினக் குடியேற்றம், நில விஸ்தரிப்பு போன்ற செயற்பாடுகளும் இடம்பெற்று வருகின்றன.

அன்று மொறகொட ஆணைக் குழுவினால் அம்பாறை மாவட்டத்தில் கரையோர மாவட்டத்தை உருவாக்கும் விடயம் சிபாரிசு செய்யப்பட்டிருந்தும் இதுவரை அது நிறைவேற்றப்படவில்லை. அதேபோல் கிழக்கு மாகாண சபைத் தேர்தலின்போது இன்றைய அரசுக்கும் முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் படி அம்பாறை மாவட்டத்தில் கரையோர மாவட்டத்தை உருவாக்குவதற்கு அரசு உறுதியளித்திருந்தது. அந்த உறுதி மொழியும் இன்று வரை நிறைவேற்றப்படவில்லையென்பதும் சுட்டிக் காட்டத்தக்கது-என்றார்.

(கு-30)

## ஆஸ்திரேலியா அரசுக்கு எதிராக சர்வதேச விசாரணை வேண்டும்

புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு எதிரான குற்றச் செயல்கள் குறித்து

புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு எதிராக ஆஸ்திரேலிய அரசு மேற்கொண்ட குற்றச் செயல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டுமென மத்திய சுயாதீன நாடாளுமன்ற உறுப்பினர் அன்ட்ரூ வில்கீ கோரியுள்ளார்.

டோனி அபோட் தலைமையிலான மத்திய அரசால் புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு எதிராக இழைத்த குற்றங்கள் தொடர்பில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் விசாரணை நடத்த வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

புகலிடக் கோரிக்கையாளர்களை அரசு நடத்திய விதம் சர்வதேச் சட்ட மீறலா? என, சர்வதேச குற்றவியல் நீதி மன்றிடம் உத்தியோகபூர்வமாக வில்கீ வினவியுள்ளார்.

பிரதமர் அபோட் முதல் அனைத்துஆளும்கட்சி உறுப்பினர்களையும் பெயரிட்டு அவர் இந்தக் குற்றச்சாட்டை சுமத்தியுள்ளார்.

ஆஸ்திரேலியாவில் புகலிடம் கோருவது சட்டவிரோதமானதல்ல என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

புகலிடக் கோரிக்கை விண்ணப்பம் நியாயமானதும் சரியானதுமாக இருந்தால் புகலிடம் வழங்கப்பட முடியும் என அவர் தெரிவித்துள்ளார். புகலிடம் வழங்குவதற்குப் பதிலாக அரசு பலவந்தமான அடிப்படையில் புகலிடக் கோரிக்கையாளர்களை வேறு நாடுகளுக்கு அனுப்பி வைப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை, நவுரு, பப்புவா நியூ கினியா உள்ளிட்ட நாடுகளுக்கு புகலிடக் கோரிக்கையாளர்கள் நாடு கடத்தப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். இது மனிதத்திற்கு எதிரான குற்றச் செயல் எனவும், ரோம் பிரகடன மீறலாகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

முறைப்பாடு தொடாபில் விசாரணை நடத்துவது குறித்து தீர்மானிக்க வேண்டியது சர்வதேச குற்றவியல் நீதிமன்றாகும் என தஸ்மானியாவை பிரதிநிதித்துவம் செய்யும் நாடாளுமன்ற உறுப்பினர் வில்கீ தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும், வீல்கீயின் இந்தநடவடிக்கையானது பிரபல்யத்தைத் தேடும் முயற்சியாகும் என ஆஸ்திரேலிய குடிவரவு குடியகல்வு அமைச்சர் ஸ்கொட் மொரிசன் தெரிவித்துள்ளார்.

(கு-சி)

# தேர்தல் ஆணையாளரை சந்திக்கின்றது ஜே.வி.பி

மூன்றாவது முறை மஹிந்த போட்டியிட முடியாது என்பதை வலியுறுத்தி

கொழும்பு. ஒக். 23

2015 ஜனவரியில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மூன்றாவது முறையாகவும் போட்டியிட முடியாது என வலியுறுத்தி அது தொடர்பில் மக்களுக்குத் தெளிவூட்டி வரும் ஜே.வி.பி., இன்று தேர்தல் ஆணையாளரைச் சந்தித்து அவருடனும் இது சம்பந்தமாகப் பேச்சு நடத்தவுள்ளது.

ராஜகிரியவிலுள்ள தேர்தல்கள் செயலகத்தில் இன்று முற்பகல் 10 மணிக்கு இந்தச் சந்திப்பு நடைபெறும். ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தலைமையிலான் குழுவொன்று கட்சி சார்பாக இதில் பங்கேற்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

உத்தேச ஜனாதிபதித் தேர்தல் குறித்து இதன்போது தமது கட்சியின் நிலைப்பாட்டைத் தேர்தல் ஆணையாளருக்கு அறிவிக்கும் என்று ஜே.வி.பி. நேற்று விடுத்த அறிக்கை யில் குறிப்பிட்டிருந்தது.

அதேவேளை, ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் சர்வ மதத் தலைவர்களுடனும் பேச்சு நடத்துவதற்குஜே.வி.பி. முயற்சி செய்துள்ளது. இம்மாதத்துக்குள் இதற்கான நடவடிக்கை ஆரம்பமாகும் என அறிய முடிகிறது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மூன்றாவது முறையாகவும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாது என்றும், அவ்வாறு அவர் போட்டியிட்டால் அது சட்ட விரோதத் தேர்தலாக அமையும்என்றும் சுட்டிக்காட்டி கருத்தரங்கு, மக்கள் போராட்டங்கள்ஆகியவற்றை ஜே.வி.பி. முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஐ.தே.கவும் இன்று சந்திப்பு

கொழும்பு, ஒக். 23

ஜனாதிபதித் தேர்தல் குறித்த உத்தியோகபூர்வ அறிவிப்பு விடுக்கப்படுவதற்கு முன்னரே ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்குத் தயாராகி வருகிறது என்பதைத் தேர்தல்கள் ஆணையாளரின் கவனத்துக்குக் கொண்டுவர ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவினர் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவை இன்று காலை 9.30 மணிக்கு தேர்தல்கள் செயலகத்தில் சந்திக்கவுள்ளனர்.

(கு-சி)

## யாழில் களையிழந்த பட்டாசுகள் விற்பனை




யாழ்ப்பாணம், ஒக்.23

குடாநாட்டில் தீபாவளிக்கான பட்டாசு விற்பனை இம்முறை களைகட்டவில்லை என்று வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

தீபாவளிக் கொண்டாட்டத்துக்காகத் தெற்கில் இருந்து பெரு மளவான பட்டாசுகள் கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்டுள்ளன.

யாழ். நகரிலும் மற்றும் நகரை அண்டிய புறநகர்ப் பகுதிகளிலும் இந்தப் பட்டாசுகள் சந்திக்குச் சந்தி வைத்து விற்கப்பட்டன. ஆயினும் அவற்றை வாங்குவதில் மக்கள் அக்கறை காட்டவில்லை.

பட்டாசு விற்பனை போதியளவு நடைபெறாமையால் தாம் பெரிதும் பாதிக்கப்பட்டதாக பட்டாசு வியாபாரி ஒருவர் தெரிவித்தார். (கு-17)

31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 26.07.1983
மறைவு 23.09.2014

அமரர் செல்வி கல்பனா சண்முகரத்தினம்

(மகாஜனக் கல்லூரி உயர்தர வர்த்தகப் பிரிவு-2002 A/L)

தூக்கம் கெடும் போதும்
கொல்கின்றது உன் நினைப்பு
தூங்கி எழும் போதும் கனக்கின்றது எம் இதயம்
கட்டிய கோட்டை கற்பனையாகிவிட்டதே
நீங்காத நினைவுதந்து நீண்ட தூரம் சென்றனையோ

வாழ்ந்த காலம் தன்னை வசந்த காலமாக்கினாயே
காலன் ஏன் உன்னை கண் வைத்தான்
மருத்துவமே இன்னும் கண்டறியாத
கொடிய நோய் தன்னை
உன் சரீரத்துக்கு ஏன் கொடுத்தான்

இறைவா ஏன் பறித்தாய் எங்கள் இன்னுயிரை
நாளும் முப்பத்தொன்றாச்சு ஆனாலும் தீரவில்லை
நீண்ட பெருமூச்சு கவலை இன்னும் ஆறவில்லை
எங்கள் அன்பின் உறைவிடமே
நீ மீண்டும் எம்மடியில் வர
ஆண்டவனை வேண்டுகின்றோம்.

(53425)(10.6)

இல.20/5,
சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்.

உன் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

பிரத்தியேக / குழு வகுப்புக்கள்
கணக்கீடு / வணிகக்கல்வி
A/L 2015, A/L 2016 & Day Batch,
AAT, Banking Classes (4/17204) (10)
Mobile: 077 6740 450, 075 077 5660

அமெரிக்க லொத்தர் விசா - V2 Travels & Tours
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற
55000 பேருக்கான வாய்ப்பு - உடனே விரையுங்கள்
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்
கடந்த வருடம் எமக்கூடாக விண்ணப்பித்து அமெரிக்கா செல்லும் வெற்றியாளர்களின் விபரங்களை ஆதாரத்துடன் எமது அலுவலகங்களில் பார்வையிடலாம்
கிளிநொச்சி 0771516537 | யாழ்ப்பாணம் 0773867257 | நெல்லியடி 0776699892 | வல்வெட்டித்துறை 0776697960

FALC FRENCH LANGUAGE CENTRE
REGISTERED FRENCH CENTRE.
FRENCH CLASSES
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட International Diplomas in French..
850 க்கும் மேற்பட்ட மாணவர்கள் French கற்றுச் சென்றுள்ளனர்...
நவீன முறையிலான கற்பித்தல்கள் Audio, Video மூலம் & A/C வகுப்பறைகள்
ஆசிரியர் : MR. V. JEGAN (Trained teacher in France - 2007, University இல் பகுதி நேர French விரிவுரைகளை மேற் கொண்டவரும்)
கடந்த DELF A1,A2 Exam இல் எம் மாணவர்கள் மட்டுமே 100% சித்தி...
Note: போலி ஆசிரியர்களிடம் சென்று ஏமாறாதீர்கள்....
ஆரம்பம்:01.11.14 Sat 8.00am. No. 40, Palaly Road, Jaffna.(ஆரியகுளம்)
ஆரம்பம்:01.11 Sat 4.30pm. No.181, 1st Floor, Main Street, நெல்லியடி.
021 320 2973
0779 789 456

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.10.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.